www.nunnarivu.com

# நீதியின் நுண்ணறிவு

NEETHIYIN NUNNARIVU

புலனாய்வு இதழ்

| Volume : 6 | Issue : 1 | Tamil Monthly | October 2025 | Price : Rs. 15/- |
|---|---|---|---|---|
| மலர் : 6 | இதழ் : 1 | தமிழ் மாத இதழ் | அக்டோபர் 2025 | விலை : ரூ. 15/- |

## மக்களை ஈர்த்த மாவட்ட ஆட்சியர் பிரதாப் ஐஏஎஸ்!





## இனி நீட் தேர்வு எளிமையாக எழுதலாம்

முன்னாள் ஐஜி
எம்.ராமசுப்பிரமணி



## யார் இந்த ஐ.ஜி. அஸ்ரா கர்க்..?

கரூர் துயரம் :
சிறப்பு புலானய்வு அதிகாரி



## நீர்நிலைகளை அழித்து சட்ட விரோதமாக செயல்படும் கல்குவாரி

## புதுக்கோட்டையில் அம்பலம்


SS AQUA
TECHNOLOGIES
SWIMMING POOL, JACUZZI & STEAM,
FOUNTAINS, LANDSCAPING & IRRIGATION
The pool gives good vibes
+ 91 96264 34377
www.ssaquatechnologies.com


SODEX
Liquid Laundry Detergent
SODEX
Floor Cleaner
SODEX
Toilet Cleaner
Active Formula
SODEX
DISHWASH LIQUID
SODEX
Fabric Softener
SODEX
Clean & Care.
Manufactured & Marketed By:
ECOGUARD LABS
Plot # 14, Rojambal Nagar Kanna puram, Mugaglivakkam Chennai 600125
Contact: 95000 76229 / 95000 76411
பொருளோ தரம்
வீட்டிற்க்கோ சுகாதாரம்!!

கரூரில் கடந்த மாதம் 27ம் தேதி தவெக தலைவரும், நடிகருமான விஜய் பங்கேற்ற பிரச்சார கூட்டத்தில் 41 உயிர்கள், நெரிசலில் சிக்கி பலியான கொடூரம், தமிழக அரசியல் களத்தில் மறக்க முடியாத ஒரு கருப்பு சரித்திரம். இந்த கோரம் நாடு முழுவதும் பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தியுள்ளது. குழந்தைகள், பெண்கள், இளைஞர்கள், முதியவர்கள் என்று அனைத்து நிலைகளிலும் உயிர்கள் தவித்தும், துடித்தும் சிதைந்து போனது பெரும் துயரமாக மாறி நிற்கிறது.

இப்படியொரு துயரம் நிகழ்வதற்கு என்ன காரணம்? யார் பொறுப்பு? என்பது மக்கள் மன்றத்தில் பெரும் கேள்வியாக எழுந்தது. இது தொடர்பாக தவெக தலைவர் விஜய்க்கும், அவரது கட்சி நிர்வாகிகளுக்கும் நீதிமன்றம் தெரிவித்துள்ள கடும் கண்டனம், தற்போது இந்த கேள்விக்கான விடையை கொடுத்துள்ளது. கரூரில் நடந்தது மனிதனால் உருவாக்கப்பட்ட பேரழிவு. ஒரு கட்டுப்படுத்தாத கலவரம் போல் இந்த சம்பவம் நடந்துள்ளது.

பரப்புரை ஏற்பாட்டாளர்கள், தலைவர்கள் என்று அனைவரும் சம்பவம் நடந்ததும் தொண்டர்களையும், பின்தொடர்ந்தவர்களையும் விட்டுவிட்டு சென்று விட்டனர். இந்த துயரத்தில் அனைத்து கட்சிகளும் மீட்பு பணியில் இருந்தபோது, நிகழ்ச்சியை நடத்தியவர்கள் மட்டும் அங்கிருந்து வெளியேறி உள்ளனர். குறிப்பாக பெண்களும், குழந்தைகளும் இறந்திருக்கும்போது, ஒரு அரசியல் கட்சியின் இத்தகைய செயலை நீதிமன்றம் வன்மையாக கண்டிக்கிறது என்று நீதிபதி குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இந்த நிகழ்வுக்கு தவெக கட்சியின் பொறுப்பற்ற நடத்தை மற்றும் அக்கட்சியின் தலைவர் விஜய் வருத்தம் தெரிவிக்க தவறியதையும் நீதிபதி கடுமையாக கண்டித்துள்ளார். ஜனாதிபதி, பிரதமர், முதல்வர் என்று அனைவரும் உடனடியாக வருத்தம் தெரிவித்தனர். ஆனால் சம்பந்தப்பட்ட கட்சியின் தலைவர் தனது வருத்தத்தை உடனடியாக பதிவு செய்யவில்லை. இது தலைவரின் மனநிலையை காட்டுகிறது. இது என்ன மாதிரியான கட்சி? தவெக தலைவர் விஜய்க்கு தலைமைத்துவ பண்பே இல்லை என்ற தனது ஆதங்கத்தையும் பதிவு செய்துள்ளார் நீதிபதி. தன்னை நம்பி நாடி வரும் மக்களை முழுமையாக நேசித்தால் மட்டுமே மக்களின் பாதுகாப்பு குறித்த உள்ளுணர்வு வரும். அந்த உணர்வானது இதுபோன்ற கோரங்களை தவிர்க்க வழிவகுக்கும். இந்த உணர்வானது புதிதாக அரசியலில் கால்பதித்துள்ள விஜய் போன்ற தலைவர்களுக்கு இனியேனும் துளிர்க்குமா என்பதே கேள்வியாக உள்ளது.



– ஆர்.சிவகுமார்,
ஆசிரியர்

www.nunnarivu.com
நீதியின் நுண்ணறிவு
NEETHIYIN NUNNARIVU
புலனாய்வு இதழ்

ஆசிரியர் வெளியீட்டாளர்
**R.சிவகுமார்**

இணை ஆசிரியர்கள்
J.கணேசபாண்டி, A.விஜய், G.ஜெயபிரகாஷ்நாராயணன்

துணை ஆசிரியர்கள்
D.சிவராஜ், K.பாரதிராஜா, G.சுரேந்திரன், B.காந்திநாதன், S.ராஜ்நாராயணன்

கௌரவ ஆலோசகர்கள்
R.வீரராகவன் B.Sc., M.A., M.B.M., LL.B.,
A.கந்தசாமி S.P.
காவல்துறை கண்காணிப்பாளர் (ஓய்வு)
சுபாஷ் சந்திரபோஸ்
காவல் துணை கண்காணிப்பாளர் (ஓய்வு)
Dr.K.முருகேசன் M.B.B.S., D.L.O.,
மா.செல்வராஜ்
(முன்னாள் முதல்வர் – குருநானக்கல்லூரி)
(மாநில தகவல் ஆணையர்)
சோம்புராஜன்
கூடுதல்ஆணையர், தொழிலாளர்துறை (ஓய்வு)
டாக்டர். மணிவண்ணன் B.S.M.S.
S.வீரப்பன்

முதன்மை நிருபர்கள்
M.சுப்பிரமணியன், R.சதீஷ்குமார், V.மாதவன், A.ராஜ்மோகன்

நிருபர்கள்
R.இன்பசேகரன், G.மோகன், S.சாம்எட்வின், C.சரவணன், S.சீனிவாசன், S.சஞ்சய்குமார், இம்ரான்கான், A.மதிமாறன், J.ஜெஸ்டின்டேவிஸ், மு.ஐசக்

சட்ட ஆலோசகர்கள்
K.M.S.செந்தில்குமார் BSc., B.L.,
M.சரவணன் M.Sc., B.L.,
A.வெங்கடேஷ்பாபு B.Sc., B.L.,

வடிவமைப்பு : 4 மீடியா டிசைன்ஸ்

நிர்வாக அலுவலகம்:
எண். 14/88, வெங்கடேஸ்வரா நகர், 3வது மெயின்ரோடு, வேளச்சேரி, சென்னை- 42.
போன் : 9884949445, 99624 56555
nunnarivuidhal@gmail.com
www.nunnarivu.com

Allrights reserved legal jurisdiction in chennai city court only. Nothing in NEETHIYIN NUNNARIVU is intended to defame any person. But expressed in good faith pursuit of truth and public good.

# பட்டுக்கோட்டை ரயில் நிலையத்தில் பாதுகாப்பான வாகன நிறுத்தம் அமைக்க ரயில் பயணிகள் கோரிக்கை

பட்டுக்கோட்டை ரயில் நிலையத்தில் பாதுகாப்பான வாகன நிறுத்தம் அமைக்க வேண்டும் என ரயில் பயணிகள் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பட்டுக்கோட்டை ரயில் நிலையத்தில் ரயில்வே நிர்வாகம் சார்பில் வாகன நிறுத்துமிடம் செயல்பட்டு வருகிறது. ரயில் பயணிகள் உரிய கட்டணம் செலுத்தி இந்த வாகன பாதுகாப்பு மையத்தை பயன்படுத்தி வருகின்றனர். இந்த வாகன நிறுத்துமிடம் பழைய மரக்கம்புகள், பழைய தகரங்களைக் கொண்டு பாதுகாப்பற்ற முறையில் அமைக்கப்பட்டுள்ளது. வலுவான காற்று மழையின்போது இந்த தகரக் கொட்டகைகள் விழுந்து சேதத்தை ஏற்படுத்தும் நிலையில் உள்ளது.



மேலும் ரயில் நிலையத்தின் நுழைவு வாயிலிலேயே இந்தத் தகர கொட்டகைகள் இருப்பதால் பயணிகளுக்கு அச்சுறுத்தலாக உள்ளது. எனவே பட்டுக்கோட்டை ரயில் நிலைய நுழைவு வாயில் அருகே உள்ள தகரங்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள வாகன நிறுத்துமிட கொட்டகைகளை அகற்றிவிட்டு புதிய பொலிவான, பாதுகாப்பான, தூய்மையான, வாகன நிறுத்துமிடத்தை அமைக்க வேண்டும் என ரயில் பயணிகள் சார்பில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

---





**ஆவடி காவல் ஆணையரகம் M4 செங்குன்றம் போக்குவரத்து போலீசாரால் 29.09.2025, செங்குன்றம் தமிழ்நாடு போக்குவரத்து கழக பேருந்து ஓட்டுனர்களுக்கு சாலை பாதுகாப்பு விதிகள் குறித்தும், பயணிகளின் பாதுகாப்புகள் குறித்தும் மற்றும் விபத்தில்லா சாலை பயணம் மேற்கொள்வதன் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.**

# நத்தம் வீட்டு மனை பட்டாக்களை கணினி மயமாக்குவதில் குளறுபடி...

## பல்வேறு வகைகளில் இன்னல்களை சந்திக்கும் மக்கள்

தமிழக அரசு அலுவலகங்கள் கணினிமயமாக்கப்பட்டு வருகிறது. பத்திரப்பதிவு, வருவாய், ஊரக வளர்ச்சித் துறை என முக்கிய துறைகளில் 80 சதவீத பணிகள் முடிவடைந்துள்ளன. வருவாய்த் துறையில் நில பதிவேடுகள் கணினிமயம் ஆக்கத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளன. பதிவுத்துறையில் கிரையமாகும் சொத்துக்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் தானாகவே கம்ப்யூட்டர் பட்டாக்களாக மாறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஊரக வளர்ச்சித் துறையில் சொத்து, குழாய் வரிகள் கணினிமயமாக்கம் செய்யப்பட்டுள்ளது.

வேளாண் துறையில் பயிர் நிலவரம் குறித்த சர்வேயில் குளறுபடிகள் நடந்து வருவதால் இன்னும் பதிவேற்றம் செய்ய முடியாமல் உள்ளது. அதேபோல வருவாய்த் துறையில் நில உரிமை பட்டாக்களைத் தவிர நத்தம் வீட்டு மனை பட்டாக்களை கம்ப்யூட்டரில் பதிவேற்றம் செய்வதில் குளறுபடி ஏற்பட்டு 2 ஆண்டுகளாக பொதுமக்களுக்கு இன்னல்களை கொடுத்து வருகிறது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே நத்தம் வீட்டுமனை பட்டாக்களை கணினியில்



பதிவேற்றம் செய்வதற்கு உதவி இயக்குனர் அலுவலகத்திற்கு அனைத்து பதிவேடுகளும் கொண்டு செல்லப்பட்டன. பதிவேற்றுவதற்கு உதவியாக அந்தந்த பகுதி வி.ஏ.ஓ.,க்கள் சர்வேயர் இருக்க வேண்டும். ஆனால் உதவி இயக்குனர் அலுவலகம் சர்வேயர், வி.ஏ.ஓ., க்களை அழைக்காமல் அவர்களாகவே பதிவேற்றம் செய்ததால், பூர்வீகமாக இருக்கும் பட்டாக்கள் அவரவர் பெயரில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

பட்டாக்களில் பிரிக்கப்பட்டவைகள் (சப் டிவிஷன்) பெயர் மாற்றம் ஆனவைகள் எதுவும் கணினியில் பதிவேற்றம் செய்யவில்லை. அதற்கு பதிலாக பூஜ்ஜியம் என காட்டுகிறது. தமிழ் நிலம் செயலியில் பதிவேற்றம் செய்யாதவைகளுக்கு முழு விபரம் தெரிவதில்லை.



**01.10.2025 திருப்பூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெற்ற வாராந்திர பொதுமக்கள் குறை தீர்க்கும் நாள் முகாமில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. யாதவ் கிரிஷ் அசோக். இ.கா.ப., அவர்கள் பொதுமக்களின் மனுக்கள் மீது விசாரணை மேற்கொண்டார்.**
















புதுக்கோட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.அபிஷேக் குப்தா இ.கா.ப., அவர்களின் உத்தரவுப்படி திரு.V.மோகன்தாஸ் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அவர்கள் தலைமையில் 29.09.2025–ம் தேதி புதுக்கோட்டை மாவட்ட JJ கல்லூரியில் சைபர் கிரைம் குற்ற விழிப்புணர்வும், குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் பற்றியும் அவர்களுக்கு சட்ட பாதுகாப்பு குறித்தும், குழந்தை திருமணம், குழந்தை தொழிலாளர் ஒழிப்பு முறை பற்றியும், குழந்தை கடத்தல் பற்றியும், போதைப்பொருள் ஒழிப்பு முறை பற்றியும், Pocso குறித்தும், சட்ட உதவி எண்கள் 1098,181,1930, 10581,14417 பற்றியும் காவல் உதவி செயலி பதிவிறக்கம் செய்யப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.




சென்னை பெருநகர காவல் ஆணையாளர் அவர்கள் உத்தரவின்பேரில், கிழக்கு மண்டலத்தில் நடைபெற்ற காவலர் குறைதீர் முகாமில், திரு. பண்டி கங்காதர், இ.கா.ப., காவல் இணை ஆணையாளர் (கிழக்கு) அவர்கள் காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களிடமிருந்து குறைதீர் மனுக்களை பெற்று உடனடியாக நடவடிக்கை எடுக்க காவல் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

# மாணவர்களை குறிவைத்து கஞ்சா விற்பனை

# 6 பேரை சிறைக்கு அனுப்பிய பழனி டி.எஸ்.பி.க்கு குவியும் பாராட்டு...



பழனி நகரில் போலீஸ் டி.எஸ்.பி. தனஞ்செயன் உத்தரவின்பேரில் போலீசார் 24 மணி நேரமும் தீவிரமாக ரோந்து சென்று குற்ற செயல்களை தடுத்து வருகின்றனர். குறிப்பாக தடை செய்யப்பட்ட கஞ்சா விற்பனை தடுக்க போலீசார் பழைய குற்றவாளிகளை தீவிர கண்காணித்து வருகின்றனர். பழனி நகர் பகுதியில் வாலிபர்கள், பள்ளி மாணவர்கள், கல்லூரி மாணவர்களை குறிவைத்து கஞ்சா விற்பதாக டி.எஸ்.பி. தனஞ்செயனுக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

அதைத்தொடர்ந்து அவர், நகரில் தீவிர ரோந்து செல்ல சப்இன்ஸ்பெக்டர் விஜய்க்கு உத்தரவிட்டார். அதையடுத்து சப்இன்ஸ்பெக்டர் விஜய் தலைமையிலான போலீசார் நகராட்சி ஆண்கள் மேல்நிலை பள்ளி அருகில் ரோந்து சென்றனர். அப்போது அங்கு இருசக்கர வாகனத்துடன் நின்ற 6 இளைஞர்கள் போலீசாரை பார்த்து நாலாபுறமும் தலைதெறிக்க ஓடினர். இது போலீசாருக்கு மிகுந்த சந்தேகத்தை ஏற்படுத்தியது. எனவே போலிசார் அவர்களை சுற்றி வளைத்து மடக்கி பிடித்தனர்.

அதையடுத்து அவர்கள் 6 பேரையும் காவல்நிலையம் அழைத்து சென்று தீவிர விசாரணை நடத்தினர். அப்போது, பழனி இடும்பன்நகரை சேர்ந்த பிரபு, ஆர்.எப். ரோட்டை சேர்ந்த பரத்ராஜ். இந்திராநகரை சேர்ந்த ஹரிபிரகாஷ் அண்ணாநகரை சேர்ந்த சூர்யா கோகுல், அடிவாரத்தை சேர்ந்த தியாகராஜன் என்பதும், மாணவர்களை மையப்படுத்தி கஞ்சா விற்பனையில் ஈடுபட்டு வந்த உறுதியானது. பின்பு போலீசார் வழக்குப்பதிந்து அவர்களை அதிரடியாக கைது செய்தனர். பின்பு நீதிமன்றத்தில் அவர்களை ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர். பழனியில் டி.எஸ்.பி. பதவி ஏற்ற நாள்முதல் மாணவர்களை சீரழித்து வரும் கஞ்சா விற்பனையை தடுக்க தனியாக கவனம் செலுத்தி வருகிறார். அதன் பாணியில் கஞ்சா விற்கும் குண்டர்கள் அடிக்கடி கைதாகி சிறைக்கு அனுப்பி வைக்கிறார். இதுபோன்று செயல்களில் சட்டவிரோத ஈடுபடுபவர்களை நீதியின் முன் நிறுத்தி சிறைக்கு அனுப்பி மக்களை நிம்மதியாக வாழ வழி செய்யும் நகர காவல் டி.எஸ்.பி. தனஞ்செயனை மக்கள் பாராட்டி, வருகின்றனர்.

---



மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி காவல்துறை ஆய்வாளர் மற்றும் காவல்துறை உதவியோடு, மனநலம் பாதிக்கப்பட்ட அம்மாவை திருவாரூர் மனநலம் காப்பகத்தில் சேர்த்து மறுவாழ்வு

சமூக சேவகர் எஸ் பாரதிமோகன் அறக்கட்டளை மயிலாடுதுறை மாவட்டம் பெரம்பூர். 6381315861 7639315925




# ஆதரவின்றி உயிரிழந்த முதியவர்

# குடும்பத்தினரைத் தேடி நெகிழவைத்த போலீஸ்...

கடலூர் மாவட்டம், சிதம்பரம் அண்ணாமலை முத்தையா நகரில் குடும்பத்தைப் பிரிந்து தனியாக வசித்து வந்த பலராமன் என்ற 65 வயது முதியவருக்கு, சில நாட்களுக்கு முன்பு திடீரென நெஞ்சு வலி ஏற்பட்டிருக்கிறது.

இதையடுத்து அங்கிருக்கும் மாவட்ட அரசு மருத்துவமனைக்குச் சென்ற அவர், அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார். அங்கு சிகிச்சை பெற்றுவந்த அவர், சிகிச்சை பலனளிக்காமல் கடந்த செப்டம்பர் 23—ம் தேதி உயிரிழந்தார்.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நாளிலிருந்து அவருடன் உறவினர்கள் யாரும் இல்லாததால், உடலை யாரிடம் ஒப்படைப்பது என்று குழம்பிப்போய் நின்றார்கள் மருத்துவர்கள்.



அதே நேரத்தில், அண்ணாமலை நகர் காவல் நிலையத்திற்குச் சென்று இன்ஸ்பெக்டர் அம்பேத்கரை சந்தித்த நடராஜன் என்ற நபர், ‘நான் பொறியாளர் பலராமன் என்பவரிடம் வேலை செய்துவந்தேன். அவர் திடீரென இறந்துவிட்டார்.

அவருக்கு மனைவி, பிள்ளைகள் இருக்கிறார்கள். ஆனால், எங்கிருக்கிறார்கள் எனத் தெரியவில்லை’ என்று கூறியிருக்கிறார். இதையடுத்து பலராமனின் உடலை சவக்கிடங்கில் வைக்குமாறு மருத்துவர்களிடம் கூறிய இன்ஸ்பெக்டர் அம்பேத்கர், அவரின் மனைவி, பிள்ளைகள் குறித்து அக்கம்பக்கத்தினரிடம் விசாரணை செய்தார்.

யாருக்கும் அவர்கள் இருக்கும் இடம் தெரியாததால், தன்னுடைய குழுவினருடன் பலராமனின் வீட்டைத் திறந்து ஆய்வுசெய்தார்.

அப்போது அங்கு பாதுகாப்பற்ற முறையில் இருந்த 74 சவரன் தங்க நகைகள், ரூ.1.5 லட்சம் பணம், ரூ.2 கோடி மதிப்புள்ள சொத்துப் பத்திரங்கள் போன்றவற்றை மீட்டு, காவல் நிலையத்தில் பத்திரப்படுத்தினார்.

அதன் பிறகு, தீவிர தேடுதலுக்குப் பிறகு பலராமனின் மனைவி,



பிள்ளைகளைக் கண்டுபிடித்து அவற்றை ஒப்படைத்திருக்கிறார்.

பலராமனின் குடும்பத்தினரை மட்டுமன்றி, ஒட்டுமொத்த தமிழகத்தையும் நெகிழவைத்திருக்கும் இந்த சம்பவம் குறித்து, இன்ஸ்பெக்டர் அம்பேத்கரிடம் பேசினோம். ``தமிழ்நாடு காவல்துறை எப்போதும் மக்களின் நண்பன்தான். அதன் தொடர்ச்சிதான் இந்த நிகழ்வும்.

பலராமன் ஒரு பொறியாளர். இடம் வாங்கி, வீடுகளைக் கட்டி அதை விற்றுவரும் தொழில் செய்துவந்த அவரிடம், மேஸ்திரியாக வேலை பார்த்தவர்தான் நடராஜன்.

பலராமன் இறந்த விஷயத்தை அவர் என்னிடம் சொன்னபோது, பலராமனின் வீட்டில் கணிசமான அளவுக்குப் பணம் இருக்கலாம் என்று தோன்றியது. அதனால் அப்போதே பலராமனின் செல்போனையும், வீட்டுச் சாவியையும் வாங்கி வைத்துக்கொண்டேன்.

பலராமன் வசித்து வந்த வீடு அவ்வளவு பாதுகாப்பானதாக தெரியவில்லை. அதனால் மேஸ்திரி நடராஜன் மற்றும் அவருடன் வேலை செய்த இருவர், பலராமனின் தூரத்து உறவினர் ஒருவர், இரண்டு எஸ்.ஐ—க்கள், 4 கான்ஸ்டபிள்கள், எஸ்.பி—யின் தனிப்பிரிவு காவலர் ஒருவர் என 11 பேர் கொண்ட டீமை அமைத்தேன்.

அதன்பிறகு பலராமனின் வீட்டைத் திறப்பதில் இருந்து, சோதனை செய்து வெளியேறும் வரை அங்கு நடக்கும் அனைத்தையும் வீடியோ எடுக்க உத்தரவிட்டு, டீமிடம் சாவியைக் கொடுத்து அனுப்பினேன். அப்படி சோதனை செய்தபோதுதான் நகைகள், ரொக்கப் பணம், சொத்துப் பத்திரங்கள் போன்றவை கிடைத்தன. அவற்றை அப்படியே காவல் நிலையத்தின் லாக்கரில் வைத்தோம்.

இதையடுத்து பலராமனின் செல்போனில் இருந்த அவரின் மனைவி மற்றும் மகனின் எண்களுக்கு போன் செய்தபோது, அவர்கள் எடுக்கவில்லை.

அவர்களின் லொகேஷனை ஆய்வு செய்தபோது அது சென்னை பொத்தேரியைக் காட்டியது. பலராமன் இறந்து இரண்டு நாட்கள் ஆகிவிட்டதால், மேஸ்திரி நடராஜனை அழைத்துக்கொண்டு பொத்தேரிக்குச் சென்றோம்.

ஆனால், அவர்களின் முகவரியை எங்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. பலமுறை போன் செய்தும் அவர்கள் எடுக்கவில்லை என்பதால், திரும்பிவிட்டோம். ஆனாலும் பலராமனின் குடும்பத்தினருக்கு தொடர்ச்சியாக போன் செய்து கொண்டிருந்தோம். அதன் பயனாக நான்காவது நாள் பலராமனின் மகன் தொடர்பில் கிடைத்தார்.

அப்போது அவரின் அப்பா இறந்த விஷயத்தை சொன்னதும், ‘அவரை நீங்களே அடக்கம் செய்து விடுங்கள்’ என்று கூறியிருக்கிறார். அதற்கு ‘உங்கள் அப்பா, கோடிக்கணக்கில் பணம், நகையெல்லாம் வைத்திருக்கிறார்.

அதை உங்களிடம் கொடுக்க வேண்டும்’ என்று சொன்னபோது சொல்ல, ‘எதுவும் எங்களுக்குத் தேவையில்லை’ என்று மறுத்திருக்கிறார் பலராமனின் மகன். அதன்பிறகு நான் பலராமனின் மனைவி இந்திராவை சமாதானப்படுத்தி அழைத்து, பலராமனின் உடலையும், உடமைகளையும் ஒப்படைத்தேன்.

உயிரிழந்த பொறியாளர் பலராமன் அதிகமாக கோபப்படும் நபராக இருந்திருக்கிறார். அதனால் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக 4 ஆண்டுகளுக்கு முன்பே, தன்னுடைய மகன், மகள் இருவரையும் அழைத்துக்கொண்டு சென்னைக்கு சென்றுவிட்டார் இந்திரா” என்றார் விரிவாக.

பலராமனின் மகன் முகேஷ் குமாரை தொடர்பு கொண்டு பேசியபோது, ``விசாரணை என்ற பெயரில் எங்களிடம் தேவையற்ற எந்தக் கேள்விகளையும் கேட்காமல், போலீஸார் மிகவும் கண்ணியமாக நடந்துகொண்டார்கள். அவர்களுக்கும், இன்ஸ்பெக்டர் அம்பேத்கர் சாருக்கும் எங்கள் நன்றி” என்றார்.

காவல்துறை பொதுமக்களின் நண்பன் என்பதை நிரூபித்திருக்கிறார்கள் இன்ஸ்பெக்டர் அம்பேத்கர் மற்றும் அவரது குழுவினர்.

## இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, கிராமிய சுய வேலைவாய்ப்பு மையத்தில்

# நான்கு சக்கர வாகன ஓட்டுனர் பயிற்சி

இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் கிராமிய சுயவேலை வாய்ப்பு பயிற்சிமைய இயக்குனர் அங்கையற்கண்ணி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:— தஞ்சை, மருத்துவக் கல்லூரிசாலை, ஈஸ்வரி நகர், 4 பக்கிரிசாமி பிள்ளை தெருவில் இயங்கி வரும் சுயவேலை வாய்ப்பு பயிற்சி மையத்தில் தற் போது 30 நாட்கள் நான்குசக்கர வாகன ஓட்டுனர் பயிற்சி வகுப்பு விரைவில் தொடங்கப்பட உள்ளது. இந்த பயிற்சியில் வாகனங்களை பராமரித்தல், பழுது பார்த்தல், ஓட்டுனருக் கான அடிப்படை வசதிகள், தற்காப்பு ஓட்டுதல், பராமரிப்பு மற்றும் எளிய வழிமுறை, மோட்டார் வாகன சட்ட அடை யாளங்கள் மற்றும் சின்னங்கள், ஸ்டியரிங் வீலைப் பிடித்துக் கொண்டு தள்ளுதல் உள்பட பல நுணுக்கங்கள் கற்றுத்தரப் படும். இப்பயிற்சியை முழுமையாக நிறைவு செய்தவர்களுக்கு வாகன ஓட்டுனர் உரிமை பெற்றுத்தரப்படும். இருவேளை தேநீர், மதிய உணவு, மற்றும் பயிற்சிக்கான உபகரணங்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்படும். மேற்கண்ட பயிற்சிக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பிக்க கடைசி நாள் அடுத்த மாதம் 8—ந்தேதி ஆகும். இந்த பயிற்சியில் 18 முதல் 45 வயது வரை உள்ள தஞ்சை மாவட்டத்தை சேர்ந்தவர்கள் கலந்து கொண்டு பயன்பெறலாம். இப்பயிற்சியில் கலந்து கொள்ள விருப்பம் உள்ளவர்கள் மேற் கண்ட மையத்தை தொடர்புக் கொண்டு முன்பதிவு செய்ய வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# அக்., 1 முதல் விரைவு தபால் மட்டுமே

## திருத்தப்பட்ட கட்டணம் அறிவிப்பு




தபால் துறையில் செயல்பட்டு வந்த பதிவு தபால் சேவை நிறுத்தப்பட்டு, விரைவு தபாலுடன் இணைக்கப்பட்டு, அக்டோபர், 1ம் தேதி முதல் நடைமுறைக்கு வருகிறது. அதனால், விரைவு தபால் கட்டணம் மாற்றியமைக்கப்பட்டு உள்ளது.

ஆவணங்களுக்கு அதிகபட்சம், 50 கிராமுக்கு உள்ளூருக்கு, 19 ரூபாய், 200 கி.மீ., வரை 47 ரூபாய், 201 கி.மீ.,ல் இருந்து, 2,000 கி.மீ., வரை 47 ரூபாய்.

அதே நேரத்தில், 51 கிராமில் இருந்து 250 கிராம் வரை உள்ளூரில் 24 ரூபாய், 200 கி.மீ., வரை 59 ரூபாய், 201 கி.மீ.,ல் இருந்து 500 கி.மீ., வரை 63 ரூபாய், 501 கி.மீ.,ல் இருந்து 1,000 கி.மீ., வரை 68 ரூபாய், 1,001 கி.மீ.,ல் இருந்து 2,000 கி.மீ., வரை 72 ரூபாய், 2,000 கி.மீ.,க்கு அப்பால் 77 ரூபாய்.

இதற்குமேல், 251 கிராமில் இருந்து 500 கிராம் வரை, உள்ளூரில் 28 ரூபாய், 200 கி.மீ.,க்குள் 70 ரூபாய், 201 கி.மீ.,ல் இருந்து 500 கி.மீ., வரை 75 ரூபாய், 501 கி.மீ., இருந்து 1,000 கி.மீ., வரை 82 ரூபாய், 1,001 கி.மீ.,ல் இருந்து 2,000 கி.மீ., வரை 86 ரூபாய், 2,000 கி.மீ.,க்கு அப்பால் 93 ரூபாய்.

உரியவரிடம் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட நபரிடம் தபால் சேர்க்கவும், உரியவர்கள் வீட்டில் இல்லாத பட்சத்தில், தபால் பெற உரியவரை நியமிக்காத நிலையில், ஓ.டி.பி., பெற்று தபால்களை சேர்க்கவும், தனித் தனியாக, 5 ரூபாய் கூடுதல் கட்டணம் வசூலிக்கப்பட உள்ளது.

திருத்தப்பட்ட கட்டணங்கள், அக்டோபர், 1ம் தேதி முதல் அமலுக்கு வருகின்றன என, தபால்துறை அறிவித்துள்ளது



ஆவடி காவல் ஆணையரகத்திற்குட்பட்ட SRMC போக்குவரத்து காவல் ஆய்வாளர் திரு. ஜெயக்குமார் மற்றும் போலீசாரால் வேலப்பன்சாவடியில் லாரி ஒட்டுநர்களுக்கு நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் சாலை பாதுகாப்பு விதிகள் குறித்தும், அதிவேகமாக வாகனம் ஒட்டுவதால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் செல்போன் பயன்படுத்தி கொண்டு வாகனம் ஓட்டுதல், தலைக்கவசம் இன்றி மற்றும் மது அருந்திவிட்டு வாகனம் ஒட்டுவதால் ஏற்படும் விபத்துக்கள் குறித்தும் பாதுகாப்பான சாலைப் பயணம் மேற்கொள்வது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

---


எஸ் எஸ் நிறுவனம்

SS ENTERPRISES

HVAC TEMPERATURE CONTROLLER

குளிருட்டிகள் மற்றும் குளிர்பாதன் உதிரி பாகங்கள் - விற்பனை & சேவை

*Air conditioner and Regfrigeration Spare Parts - Sales & Service*

நெ.42/எச், கைவிலாஞ்சேரி மெயின்ரோடு, தென்பாதி, சீர்காழி, மயிலாடுதுறை மாவட்டம், தமிழ்நாடு - 609111. (பாலாஜி திரையரங்கம் எதிரில்)

No.42/H, Kaivilancheery Main Road, Thenpathi, Sirkazhi - TK, Mayiladuthurai District, Tamil Nadu - 609 111. (Opp Balaji Theatre)



BLUE STAR VOLTAS Carrier YORK TRANE MITSUBISHI HITACHI LG SAMSUNG

Cell: 9677329554

email: ssesirkali@gmail.com



# நீர்நிலைகளை அழித்து சட்ட விரோதமாக செயல்படும் கல்குவாரி

## புதுக்கோட்டையில் அம்பலம்

புதுக்கோட்டை மாவட்டம் குளத்தூர் தாலுகா கண்ணாங்குடி கிராமத்தில் D.மஞ்சுநாத் த/பெ தேவேந்திரன் என்பவர் கண்ணாங்குடி கிராமத்தில். 99/16C, 99/17, 99/18C, 99/19C, 99/20C, 99/21C மேற்கண்ட புல எண்களில் 1.51.00 எக்டர் பரப்பளவில் கல் குவாரி நடத்துவதற்கு தமிழ்நாடு அரசு புவியியல் மற்றும் சுரங்கத் துறையிடம் ஐந்து ஆண்டுகளுக்கு அனுமதி பெற்றுக்கொண்டு கண்ணாங்குடி கிராமத்தில் உள்ள நீர்நிலை அரசு புறம்போக்கு 96/3, 18/1 ஆகிய புலஎண்களில் 100 அடிக்கு மிகாமல் கற்களை வெட்டி எடுத்து வருகிறார்கள் இது தமிழ்நாடு கனிமவள சட்டங்களுக்கு எதிரானது என்கிறார் அக்கிராமத்தைச் சேர்ந்த பசுபதி.

மேலும் அவர் கூறுகையில், சட்டவிரோதமாக வெட்டி எடுக்கப்படும் கற்களை பெரிய கனரக வாகனங்கள் மூலம் எடுத்துச் செல்வதற்கு செங்காளூர் கிராமம் பொதுப்பணித்துறைக்கு சொந்தமான பெரிய குளம் புல எண் 157—ல் கல் குவாரியின் கழிவுகளைக் கொண்டு சட்டத்திற்கு விரோதமாக நடு குளத்தில் சாலை அமைத்துள்ளார்கள். இந்த சமூக விரோத செயல் நீண்ட நாட்களாக அக் கிராமங்களில் நடந்து வருகிறது. இதனால் அரசுக்கு கோடிக்கணக்கான ரூபாய் வருவாய் இழப்பு ஏற்பட்டு இருக்கிறது. இந்த கனிமவள கொள்ளையை கண்காணிக்க மற்றும் தடுக்க தவறிய வருவாய்த்துறை, கனிம வளத்துறை மற்றும் காவல் துறை அலுவலர்கள் இந்த சமூக விரோத செயலுக்கு உடந்தையாக இருந்து வருகிறார்கள் என்பதுதான் முதல் குற்றச்சாட்டு.

D.மஞ்சுநாத் த/பெ தேவேந்திரன் என்பவர் கண்ணாங்குடி கிராம புல எண் 18/2, 18/3 ஆகிய பட்டா இடங்களில் 150 அடிக்கு மிகாமல் 2.16.0 எக்டர் பரப்பளவில் கிராவல் மண்ணை சட்டவிரோதமாக வெட்டி வெளிச்சந்தையில் விற்பனை செய்துவிட்டு. அந்த கிராவல் மண் வெட்டப்பட்ட 150 அடி பள்ளத்தாக்கில் கல்குவாரியின் கழிவுகளைக் கொட்டி பூமிக்கும் கீழே 150 அடியிலும், பூமி மட்டத்திலிருந்து 150 அடி மேலே மலை போல் கழிவுகளை குவித்துள்ளார்கள். இந்த புகார் மீது இதுவரையும் எந்த நடவடிக்கையும்


பசுபதி

மேற்கொள்ளப்படவில்லை.

கற்களை வெட்டி அதிகப்படியான எடையை சுமந்து எடுத்துச் சென்ற வாகனங்கள் மூலம் கண்ணாங்குடி கிராமம் குளவாய்ப்பட்டி சாலைகள் மிகவும் பழுதாகி படுகுழிகளாக உள்ளது. கீழையூர் கிராமம் நீர்நிலை புலஎண்.40/4 குளத்தின் அணைக்கட்டு 10 மீட்டர் தூரத்தில் இந்த குவாரி சட்டத்திற்கு புறம்பாகவும், கனிமவள சட்ட விதிகளையும் பின்பற்றாமலும் தொடர்ந்து இயங்கி வருகிறது. இதை அனைத்தையும் புகைப்படங்களாகவும் காணொளியாகவும் நாங்கள் பதிவு செய்து உள்ளோம் விரைவில் நீதிமன்றத்தை நாட உள்ளோம் என்கிறார்கள்.

கனிமவள சட்டத்திற்கும்,விதிகளுக்கும் புறம்பாக இயங்கி வரும் குவாரியை ஆய்வு செய்து சீல் வைத்து மூட வேண்டும். அதற்காக பயன்படுத்தப்பட்ட ஹிட்டாச்சி, டிப்பர் கனரக வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட வேண்டும். சட்ட விரோதமாக நடத்தப்பட்ட குவாரியின் மூலம் அரசுக்கு கோடிக்கணக்கான ரூபாய் வருவாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது.அதனை கணக்கிட்டு மேற்கண்ட நபர்களிடமிருந்து வருவாய் இழப்பை வசூல் செய்யப்பட வேண்டும்.சட்டவிரோதமாக கனிம வளங்களை கொள்ளையடிப்பவர்கள் மீது குண்டாஸ் நடவடிக்கைகளை பிரயோகிக்க வேண்டுமென நீதிமன்றம் அறிவுறுத்தி வருவதை மாவட்ட நிர்வாகம் தலையிட்டு செய்ய வேண்டும்.

உரிய தினங்களுக்குள் நடவடிக்கை மேற்கொள்ளாத பட்சத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் எதிர் மனுதாரராக இணைத்து மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் முறையிடுவோம் வேறு வழி தெரியவில்லை என்கிறார்கள் அந்த பகுதி கிராமவாசிகளும்...



– துரைகுணா, சமூக ஆர்வலர்

# 20 காவல் ரோந்து வாகனங்கள்..

## மதுரை மாநகர காவல் ஆணையர் முனைவர் ஜெ.லோகநாதன் கொடியசைத்து துவக்கி வைத்தார்



(27.09.2025) மதுரை மாநகர ஆயுதப்படை மைதானத்தில், மாநகர சட்டம்&ஒழுங்கு, குற்றப்பிரிவு மற்றும் போக்குவரத்து பிரிவு காவல் துறையினரின் பயன்பாட்டிற்காக, அதிநவீன கேமரா மற்றும் ஆயுதம் ஏந்திய காவல் இருசக்கர ரோந்து வாகனங்கள் –08, மாநகரின் வாகன நெருக்கடி மிகுந்த பகுதிகளில் போக்குவரத்து சீர் செய்யும் பணி மற்றும் சாலை விபத்துப் பகுதிகளில் மீட்பு பணிகளை மேற்கொள்ள போக்குவரத்து காவல் மீட்பு வாகனங்கள் 02, சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்படும் போது அவசர காலங்களில் காவல்துறையினர் விரைவாக செல்லக்கூடிய வகையில் கேமராக்கள் பொருத்திய அதிரடிப்படை QRT நான்கு சக்கர வாகனங்கள் 03, மற்றும் மதுரை மாநகரில் தெற்கு மற்றும் வடக்கு மாவட்ட ரோந்து பணிக்காக நான்கு சக்கர காவல் ரோந்து வாகனங்கள் உட்பட்ட 20 காவல் ரோந்து வாகனங்களை பொதுமக்களுக்கு விரைந்து சேவை செய்யும் பொருட்டு காவல்துறையினரின் பயன்பாட்டிற்காக மதுரை மாநகர காவல் ஆணையர் முனைவர் ஜெ.லோகநாதன் இ.கா.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார். காவல் துணை ஆணையர் போக்குவரத்து,. காவல் துணை ஆணையர் ஆயுதப்படை, போக்குவரத்து காவல் உதவி ஆணையர் மற்றும் நுண்ணறிவுப்பிரிவு காவல் உதவி ஆணையர் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# “மாணவர்களுக்கு எளிதாக புரியும் வகையில் புதிய புத்தகம்”

## இனி நீட் தேர்வு எளிமையாக எழுதலாம்

## முன்னாள் ஐஜி எம்.ராமசுப்பிரமணி பெருமிதம்

முன்னாள் காவல்துறை ஐஜி எம் ராமசுப்பிரமணியன் இயக்குனராக உள்ள வெரியன் டெக் இந்தியா பிரைவேட் லிமிடெட் சார்பில் சென்னை எக்மோரில் உள்ள நெல்லை தூத்துக்குடி நாடார் மகமை பரிபாலன சங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் எக்சார் தொழில்நுட்பத்தை அடையாளம் அடிப்படையாகக் கொண்டு நீட் தேர்வுக்கான தயாரிப்பை மாணவர்களுக்கு புரியும் வகையில் மலிவான விலையிலும், எளிமையாகவும், அனைவருக்கும் எட்ட கூடியதாகவும் மற்றும் முன்னோடியான படைப்பாகவும், சர்வதேச ஆய்வுகள் மற்றும் அரசின் கல்விக் கொள்கைகளுக்கு ஏற்ப இந்த புத்தகம், தளம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

*மாணவர்கள் தங்களின் நினைவாற்றலை மேம்படுத்தி பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களின் முன்னேற்றத்தை எளிதில் கண்காணிக்க இந்த தளம் வழி செய்கிறது. இந்த தளம் ஏ.ஆர்/வி.ஆர் அடிப்படையிலான 3டி உள்ளடக்கங்களுடன் வீடியோ சொற்பொழிவுகள் பாட்காஸ்ட் விரிவான குறிப்புகள் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வினாக்கள் முந்தைய ஆண்டு நீட் கேள்வி தொகுப்பு செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான பகுப்பாய்வு தனிப்பயன் மாதிரி தேர்வுகள் கைப்பதிவு குறிப்புகள் மொபைல் மற்றும் டெஸ்க்டாப் இரண்டிலும் பயன்படுத்தக்கூடிய பிடிஎப் புத்தகங்களுடன் ஒரு ஆண்டுக்கான சந்தா கட்டணம் ரூ 23999 என மிகக்குறைந்த கட்டணத்தில் எக்சார் நிறுவனம் மாணவர்களுக்கு வழங்குகிறார்கள்.*

*இந்த விழாவில் கலந்து கொண்ட ஓய்வு பெற்ற ஐஜி எம்.ராமசுப்பிரமணி பேசுகையில் பல திறமையான மாணவர்கள் அதிக கட்டணம் உள்ள பயிற்சி மையங்களுக்கு செல்ல முடியாமல் தவிக்கிறார்கள். நாங்கள் கல்வியை வெளிப்படையான எளிதில் அணுகக்கூடிய புரியக்கூடிய வழியில் மிகவும் குறைந்த கட்டணத்தில் இந்த நீட் தேர்வு புத்தகங்களை மாணவர்களுக்கு வழங்க*

உள்ளோம். நீட் என்பது கனவாகவே இருக்கும் பல மாணவர்களுக்கு இந்த புத்தகம் மிகப்பெரிய வரப்பிரசாதமாக இருக்கும் என அவர் தெரிவித்தார்.

இந்த புத்தக வெளியீட்டு விழாவில் தலைமை விருந்தினராக காவல் துறை இணை ஆணையர் கிழக்கு மண்டலம் பண்டி கங்காதர், பத்திரிக்கையாளர் சங்கத் தலைவர் சகாயராஜ், பாம்பே ஸ்வீட் மணி சர்மா, லட்சுமி, டாக்டர் ஜேம்ஸ் பிரேம்குமார், சந்திரசேகர பாண்டியன், நடிகர் தாமு, என் பால சரவணன், டாக்டர் எம் ஜெகதீசன், ஆகியோர் கலந்து கொண்டனர் அதேபோல இந்த நிகழ்வில் மாணவர்களுக்கு இந்த புத்தகங்கள் இலவசமாக கிடைக்க வேண்டுமென கூறி மூன்று நபர்கள் 5 லட்சம் ரூபாய் வழங்கினார்கள். மேலும் அதேபோல இந்த நிறுவனம் சார்பில் முன்னாள் ஐஜி எம் ராமசுப்பிரமணியம் பத்திரிக்கையாளர்கள் மற்றும் காவல்துறையினர் பிள்ளைகள் 50 பேருக்கு நீட் தேர்வுக்கான இந்த புத்தகங்களை இலவசமாக வழங்குவதற்கு முன் வந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

---

### சைதாப்பேட்டை பகுதியில் அடுக்குமாடி குடியிருப்பில்

# வீட்டின் பூட்டை உடைத்து தங்க நகைகள் திருடிய வழக்கில் வெளிமாநிலத்தைச் சேர்ந்த 2 நபர்கள் கைது.





சென்னை, சைதாப்பேட்டை, புஜங்காரா வீதி, எண்.12/19 என்ற முகவரியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் 2 வது தளத்தில் ஓய்வு பெற்ற ரயில்வே ஊழியர் தியாகராஜன், வ/58, த/பெ.நாகராஜன் என்பவர் வசித்து வருகிறார். இவர் கடந்த 08.09.2025 அன்று காலை வீட்டை பூட்டிவிட்டு ஆந்திர மாநிலம் புத்தூரில் உள்ள கோயிலுக்கு சென்று விட்டு மாலை வீட்டிற்கு வந்து பார்த்தபோது, வீட்டின் முன்பக்க கதவின் பூட்டு உடைக்கப்பட்டு, வீட்டில் பீரோவில் வைத்திருந்த சுமார் 32 சவரன் தங்க நகைகள் மற்றும் சில வெள்ளிப்பொருட்கள் திருடு போயிருந்தது தெரியவந்தது. இது குறித்து தியாகராஜன் J—1 சைதாப்பேட்டை காவல் நிலைய குற்றப்பிரிவில் புகார் கொடுத்ததின்பேரில், போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். உதவி காவல் ஆணையர் சீனிவாசன் மேற்பார்வையில் J—1 சைதாப்பேட்டை காவல் நிலைய குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் ரவிச்சந்திரன் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து சம்பவயிடத்தில் கிடைத்த கண்காணிப்பு கேமரா பதிவுகளுடன் தேடுதலில் ஈடுபட்டு, இவ்வழக்கில் தொடர்புடைய 1.ஷாம்முகமது, வ/35, உத்திரப்பிரதேச மாநிலம், 2.நூர் இஸ்லாம், வ/32, உத்திரப்பிரதேச மாநிலம் ஆகிய 2 நபர்களை கைது செய்தனர். 1 இரும்பு ராடு, 1 செல்போன் மற்றும் ATM கார்டுகள் பறிமுதல் செய்யப்பட்டது. விசாரணையில் எதிரி ஷாம் முகமது மீது உத்திரப்பிரதேச மாநிலத்தில் 6 குற்ற வழக்குகள் உள்ளது தெரியவந்தது.

மேலும் விசாரணையில் மேற்படி நபர்கள் அவர்களது நண்பர்கள் இருவருடன் சேர்ந்து உத்திரப்பிரதேச மாநிலத்திலிருந்து சென்னை வந்து சென்ட்ரலில் உள்ள தங்கும் விடுதியில் அறை எடுத்து தங்கி, சென்னையில் பல்வேறு இடங்களுக்கு டெலிவரிபாய் போல சென்று பூட்டியிருக்கும் வீடுகளை நோட்டமிட்டு, பூட்டை உடைத்து தங்க நகைகளை திருடியது தெரியவந்தது. அவ்வாறு மேற்படி தியாகராஜன் வீட்டில் 08.09.2025 அன்று திருடிய தங்க நகைகளை எதிரிகள் டெல்லியில் உள்ள தங்க கடையில் விற்பனை செய்து பணம் பெற்று பங்கு பிரித்துள்ளது தெரியவந்தது.

மேற்படி வழக்கில் தொடர்புடைய மற்ற குற்றவாளிகளையும், திருடிய தங்க நகைகளை மீட்க தனிப்படை போலீசார் தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றனர். கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டனர்.



22.09.2025 தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர் உட்கோட்டத்தில் புதிதாக கட்டப்பட்ட நாச்சியார் கோவில் காவல் நிலையத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காணொளி மூலம் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் தஞ்சாவூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர், திருவிடைமருதூர் துணைக்காவல் கண்காணிப்பாளர், நாச்சியார் கோவில் காவல் நிலைய ஆய்வாளர் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் நிகழ்ச்சியில் கலந்துக்கொண்டனர்.



தஞ்சாவூர் மாவட்டம் கதர் அங்காடியில் மகாத்மா காந்தி ஜெயந்தியினை முன்னிட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பா.பிரியங்கா பங்கஜம், இ.ஆ.ப., அவர்கள் மகாத்மா காந்தியின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி தீபாவளி சிறப்பு கதர் விற்பனையினை துவக்கி வைத்தார்.




**வெளிமாநில மதுபாட்டில்களை சட்டவிரோதமாக இருமடங்கு விலையில் விற்க பதுக்கி வைத்திருந்த நபர் கைது..!**

# சுமார் ரூ.3.5 லட்சம் மதிப்புள்ள 160 மதுபாட்டில்கள் பறிமுதல்.

**சென்னை பெருநகர காவல் ஆணையாளர் திரு.ஆ.அருண், இ.கா.ப., அவர்கள் உத்தரவின் பேரில் சென்னை பெருநகர காவல் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சட்ட விரோதமாக மதுபாட்டில்களை பதுக்கி வைத்து விற்பனை செய்து வரும் நபர்களையும், வலை பின்னல்களை காவல் குழுவினர் தகுந்த புலன் வைத்து கண்காணித்து கைது செய்து நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.**

இதன் தொடர்ச்சியாக, மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு உதவி ஆணையாளர் (வடக்கு) மற்றும் பூக்கடை மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு காவல் ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் லாரிகளில் பார்சல்கள் மூலம் வெளி மாநில மதுபாட்டில்களை கடத்தி வருவதாக கிடைத்த ரகசிய தகவலின்பேரில், காவல் குழுவினர் (02.10.2025) காலை, கொருக்குப்பேட்டை, பிட்டி முனுசாமி தெருவில் கண்காணித்து ஒரு கடையை சோதனை செய்த போது, அங்கு வெளி மாநில மது பாட்டில்களை சட்டவிரோத விற்பனைக்காக பதுக்கி வைத்திருந்தது தெரியவந்தது.

அதன்பேரில், பூக்கடை மதுவிலக்கு அமலாக்கப்பிரிவில் வழக்குப்பதிவு செய்து, சட்டவிரோதமாக வெளி மாநில மதுபாட்டில்களை வைத்திருந்த அலாவுதீன், வ/43, மண்ணடி, சென்னை என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து சுமார் ரூபாய் 3.5 இலட்சம் மதிப்புள்ள 160 வெளி மாநில மதுபாட்டில்கள் பறிமுதல் செய்யப்பட்டது. மேலும் விசாரணையில் கைது செய்யப்பட்ட அலாவுதீன் டெல்லி மாநிலத்தில் விற்பனை செய்யப்படும் Duty Free மதுபாட்டில்களை குறைந்து விலைக்கு வாங்கி வந்து சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இருமடங்கு விலை வைத்து சட்ட விரோதமாக விற்பனை செய்து வந்தது தெரியவந்தது. மேலும் இவர் குழுவாக செயல்பட்டு வெளிநாட்டு மதுபாட்டில்களை விற்பனை செய்து வந்ததும், ஏற்கனவே இக்குழுவை சேர்ந்த சுனில் மற்றும் பிரபு ஆகியோர் கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அலாவுதீன் மீது மது பாட்டில்கள் விற்பனை செய்த குற்றத்திற்காக ஏற்கனவே 2 வழக்குகள் உள்ளதும் தெரியவந்தது. கைது செய்யப்பட்ட எதிரி அலாவுதீன் விசாரணைக்குப் பின்னர் (03.10.2025) நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவுள்ளார்.

## கரூர் துயரம்

# ஐ.ஜி. அஸ்ரா கர்க் தலைமையில் சிறப்புப் புலனாய்வுக் குழு



கரூரில் தவெக தலைவர் விஜய் பிரசாரத்தின் போது நேரிட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் பலியான சம்பவம் குறித்து காவல்துறை ஐ.ஜி. அஸ்ரா கர்க் தலைமையில் சிறப்புப் புலனாய்வுக் குழுவை அமைத்துள்ளது சென்னை உயர் நீதிமன்றம்.

கரூர் கூட்ட நெரிசல் தொடர்பான வழக்கு சென்னை உயர் நீதிமன்றத்தில் வழிகாட்டு நெறிமுறைகள் வகுப்பது தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட மனு மீது விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த உயர் நீதிமன்ற நீதிபதி செந்தில்குமார், விஜய் பிரசாரம் செய்த வாகனம் இடித்து, விபத்து நேரிட்டுள்ளதே, அந்த சம்பவத்தில், இடித்துவிட்டு ஓடியதாக விஜய் வாகனம் மீது ஏன் வழக்குப் பதிவு செய்யவில்லை. அவ்வாறு செய்யாவிட்டால் மக்களுக்கு எப்படி நம்பிக்கை ஏற்படும் என்று நீதிபதி கேள்வி எழுப்பியிருக்கிறார்.

தொடர்ந்து வாதங்களைக் கேட்ட நீதிமன்றம், கரூர் பலி சம்பவம் குறித்து காவல்துறை ஐ.ஜி. அஸ்ரா கர்க் தலைமையில் சிறப்புப் புலனாய்வுக் குழு அமைக்கப்பட்டு விசாரணை நடத்தப்படும் என உத்தரவிட்டது.

மேலும், அனைத்து ஆவணங்களையும் சிறப்புப் புலனாய்வுக் குழுவிடம் கரூர் காவல்துறையினர் ஒப்படைக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளது.

தவெக கட்சியினருக்கு கடும் கண்டனம் தெரிவித்திருக்கும் சென்னை உயர் நீதிமன்றம், கடும் கூட்டம் சேர்வதை முன்கூட்டியே கணித்திருக்க வேண்டாமா? இந்த இடத்தை காவல்துறைதான் அனுமதித்திருக்கிறது? பிறகு, இங்கு இவ்வளவு கூட்டம் சேரும்போது நடவடிக்கை எடுத்திருக்க வேண்டாமா? காவல்துறை வேடிக்கைப் பார்க்கிறது, ஆனால் நீதிமன்றம் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்காது. விஜய் வந்த வாகனம் ஏன் பறிமுதல் செய்யப்படவில்லை.

கட்சித் தலைவர்கள், நிர்வாகிகள், கூட்டத்துக்கு ஏற்பாடு செய்தவர்கள் எல்லாம் சம்பவம் நடந்ததும் அங்கிருந்து தப்பியோடிவிட்டார்கள். ஒருவர் கூட பொறுப்பேற்கவில்லை. தலைவர்கள் பலரும் தலைமறைவாகிவிட்டார்கள். விஜய் பிரசாரம் செய்த வாகனம் ஏன் இன்னமும் பறிமுதல் செய்யப்படவில்லை.

இது குறித்து அரசு தரப்பில் விளக்கம் கூறியிருப்பதாவது, தவெக தலைவர் விஜய் பிரசாரம் செய்த இதே இடத்தில்தான் எடப்பாடி பழனிசாமி பிரசாரம் செய்தார். விஜய் பிரசாரப் பயணத்துக்கு 500க்கும் மேற்பட்ட காவல்துறையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

காவல்துறை அனுமதி வழங்கிய நேரத்தைக் காட்டிலும் மிகக் கால தாமதமாகவே விஜய் பேச வந்தார். மாலை 3 மணிக்கு விஜய் பேசுவார் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், 12 மணி முதலே மக்கள் கூடத் தொடங்கிவிட்டனர். இரவு 7 மணிக்கு மேல்தான் விஜய் அங்கு வந்தார். அரசு மீது மிக எளிதாக குற்றச்சாட்டுகளை சொல்லிவிடலாம் என்றும் குறிப்பிட்டிருக்கிறது.

### யார் இந்த ஐ.ஜி. அஸ்ரா கார்க்?

பஞ்சாப் மாநிலம் பாட்டியாலாவை பூர்வீகமாகக் கொண்ட அஸ்ரா கார்க், ஒரு பொறியியல் பட்டதாரி. சிவில் சர்வீசஸ் தேர்வில் வெற்றி பெற்று, 2004ம் ஆண்டு தமிழ்நாடு கேடர் ஐ.பி.எஸ். அதிகாரியாக பணியில் சேர்ந்தார். திருப்பத்தூரில் உதவி காவல் கண்காணிப்பாளராக தனது பயணத்தை

தொடங்கிய அவர், குறுகிய காலத்திலேயே தனது செயல்திறனால் அனைவரின் கவனத்தையும் ஈர்த்தார். 2008 முதல் 2010 வரை திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி.யாக பணியாற்றியபோது, கந்துவட்டி கொடுமையை ஒழிக்க கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டார். இது பொதுமக்களிடையே அவருக்கு பெரும் நற்பெயரை பெற்று தந்தது.

2010ல் மதுரை மாவட்ட எஸ்.பி.யாக பொறுப்பேற்றபோது, உத்தபுரம் கிராமத்தில் தலித் மக்கள் நுழைய முடியாதபடி எழுப்பப்பட்டிருந்த தீண்டாமைச் சுவரை அகற்றுவதில் முக்கிய பங்காற்றினார். சமூக நீதிக்கான அவரது இந்த நடவடிக்கை, மாநிலம் முழுவதும் பெரும் பாராட்டுகளை பெற்றது.

மேலும் பகுஜன் சமாஜ் கட்சியின் மாநிலத் தலைவர் ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டு, குற்றவாளிகளை கண்டறிந்தார். 2021ல் மதுரையில் நடந்த இரட்டை கொலை வழக்கில் திறம்பட செயல்பட்டு குற்றவாளிகளை விரைவாக கைது செய்ததற்காக உயர்நீதிமன்றத்தால் நேரடியாக பாராட்டப்பட்டார். இப்படி பல சவாலான வழக்குகளைதிறம்படக் கையாண்ட அனுபவமும், நேர்மையான அதிகாரி என்ற பெயரும் கொண்ட ஐ.ஜி. அஸ்ரா கார்க், கரூர் துயர சம்பவத்தின் விசாரணையை முன்னெடுப்பது, பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.










# குழந்தைகள் காப்பகத்தைத் துவங்கி வைத்த காவல் கண்காணிப்பாளர் அவர்கள்..

தேனி மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் Dr.B.சினேஹாப்ரியா ,இ.கா.ப., அவர்கள் தலைமையில், கூடுதல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்(CCPS) திரு.R. ஜெரால்ட் அலெக்சாண்டர் அவர்கள், தேனி மாவட்ட ஆயுதப்படை காவல் துணைக் கண்காணிப்பாளர் திரு.M.ராஜன் அவர்கள், ஆயுதப்படைக் காவல் ஆய்வாளர் திரு. ஜெயச்சந்திரன் அவர்கள், தேனி மாவட்ட ஆயுதப்படைக் காவலர் குடியிருப்பில் வசிக்கும் காவலர்களின் குழந்தைகளைப் பராமரிக்கும் வகையில் "குழந்தைகள் காப்பகம்" துவங்கி வைத்தனர்.. மேலும் காவலர்கள் தங்களது குழந்தைகளை காப்பகத்தில் சேர்ப்பதற்குச் சேர்க்கை நடைபெற்றது..






(2/10/25) மதுரவாயல் பகுதியில் அனைத்து மக்கள் அரசியல் கட்சியின் சார்பாக "போதையில் சிக்கி தவிக்கும் தமிழகத்தை மீட்டெடுப்போம்" என்ற தலைப்பில் நடைபெற்ற பொது கூட்டம் பெண்களின் ஆதரவுடன் மிகச்சிறப்பாக நடைபெற்றது. பெண்கள் அனைவரும் அதீத அன்பை என் மீது பொழிந்து கண்ணீர் விட்டு அவர்களது குடும்பங்கள் போதையால் பாதிக்கபட்டு வருவதனை தெரிவித்தனர். மக்களின் துயர் துடைக்க அனைத்து மக்கள் அரசியல் கட்சி என்றும் உறுதுணையாக இருக்கும்.

---



# சீர்காழியில் காந்தி ஜெயந்தியன்று மது விற்பனை படு ஜோர்!

*காந்தி ஜெயந்தி தினத்தன்று மது விற்பனையை தமிழக அரசு தடை செய்துள்ளது. எனினும் மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே வேட்டங்குடி சேகர் என்பவர் வீட்டில் காரைக்கால் மது பாட்டில்கள் மற்றும் தமிழக அரசு மதுபான கடையில் இருந்து மொத்தமாக வாங்கப்பட்ட மதுபானங்கள் விற்பனை செய்யப்படுகின்றன.*

# தலைமை செயலகத்தை சுற்றி சர்ச்சைக்குரிய போஸ்டர் ஒட்டப்படுதல் கூடாது..!

## போலீசாருக்கு கமிஷனர் அருண் உத்தரவு






வரும் அக்டோபர் 14ஆம் தேதி தமிழக சட்டப்பேரவை கூடவுள்ளதை முன்னிட்டு, தலைநகரில் பாதுகாப்பை உறுதி செய்யவும், காவல்துறையின் செயல்பாடுகளை நெறிப்படுத்தவும் சென்னை காவல் ஆணையர் அருண், பல்வேறு முக்கிய அறிவுறுத்தல்களுடன் சுற்றறிக்கையை வெளியிட்டுள்ளார். இது குறித்துக் காவல்துறை அதிகாரிகளுக்குப் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவுகள் பின்வருமாறு:

தலைமை செயலகத்திற்குள் நுழையும் அனைத்துப் பொதுமக்களும் கட்டாயச் சோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

சட்டப்பேரவை வளாகத்திற்குள் எக்காரணம் கொண்டும் எந்தவிதமான துண்டுப் பிரசுரங்களையும் விநியோகிக்க அனுமதி இல்லை.

தலைமைச் செயலகத்தைச் சுற்றி சர்ச்சைக்குரிய சுவரொட்டிகள் ஒட்டப்படுதல் கூடாது என்றும் கடுமையாக வலியுறுத்தப்பட்டுள்ளது.

காவல் நிலையங்களில் சட்டம்—ஒழுங்கு மற்றும் விசாரணை நடைமுறைகள் குறித்தும் ஆணையர் அருண் மிகக் கடுமையான உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளார்:

காவல் ஆய்வாளரின் முன் அனுமதியின்றி எந்த ஒரு சந்தேக நபர்களையும் காவல் நிலையத்தில் அடைத்து வைக்கக் கூடாது.

விசாரணையின் போது, கைதிகள் எந்த விதத்திலும் துன்புறுத்தப்படக் கூடாது.

மேலும், விசாரணை கைதிகளைக் கூர்ந்து கண்காணிக்க வேண்டும் என்றும் என்று சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---



## ஆழ்ந்த இரங்கல்

புதுக்கோட்டை மாவட்டம் மணமேல்குடி காவல் நிலைய பெண் உதவி ஆய்வாளர் லட்சுமி பிரியா (33) வீட்டில் துணி அயர்ன் செய்து கொண்டிருந்தபோது மின்சாரம் தாக்கி உயிரிழந்தார்.




# இடிந்து விழும் அவலநிலையில் கறம்பக்குடி சார்பதிவாளர் அலுவலகம்

*புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடியில் சார்பதிவாளர் அலுவலகம் இடிந்து விழும் அவலநிலை உள்ளதால் ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர்.*

*கச்சேரி வீதி, கறம்பக்குடியில் 25 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட சார்பதிவாளர் அலுவலகம் செயல்பட்டு வருகிறது. இங்கு பதிவாளர் உட்பட 10க்கும் மேற்பட்டோர் பணியாற்றி வருகின்றனர். இந்த அலுவலகத்தில் கறம்பக்குடி மற்றும் அதனை சுற்றியுள்ள 100க்கும் மேற்பட்ட கிராமங்களை சேர்ந்தவர்கள் முக்கிய ஆவணங்கள் பதிவு செய்வது மட்டுமின்றி பாதுகாக்கப்பட்டும் வருகின்றது.*

*இந்நிலையில் தினமும் பத்திரப்பதிவு, திருமண பதிவு என பதிவுத்துறை சம்பந்தமாக நாள் ஒன்றுக்கு 100க்கும் மேற்பட்டோர் வந்து செல்கின்றனர். தற்போது அலுவலக கட்டிடமானது பழுதடைந்து ஆங்காங்கே இடிந்து விழுந்து வருகின்ற நிலையில் அங்கு பணிபுரிகின்ற ஊழியர்களும் அலுவலகத்திற்கு வரும் பொதுமக்களும் உயிரை கையில் பிடித்துக் கொண்டு பணிகளை கவனிக்க வேண்டிய சுழல் நிலவுகிறது. மழைக்காலத்தில் இங்கு பராமரிக்கப்பட்டு வரும் ஆவணங்கள் நனைந்து வீணாகும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, கழிப்பறை வசதி இல்லாமல் அரை கி.மீ தொலைவில் உள்ள பேருந்து நிலையத்தில் உள்ள கழிப்பறையை ஊழியர்கள் பயன்படுத்தி வரும் நிலையில், அலுவலகத்திற்கு வரும் முதியவர்கள், பெண்கள் என வெவ்வேறு தரப்பினர் சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர். எனவே இந்த சார்பதிவாளர் அலுவலகத்தை அகற்றி, அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய சார்பதிவாளர் அலுவலகம் கட்டித்தர வேண்டும் என பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.*

*40 ஊராட்சிகள் மற்றும் ஒரு தேர்வு நிலை ஊராட்சி மற்றும் நகராட்சியாக தரம் உயர்த்த அரசு அறிவித்து உள்ளது. ஒரு நாளைக்கு பொதுமக்கள் டோக்கன் முறைப்படி 50க்கும் மேற்பட்ட பத்திரப்பதிவு நடைபெறுகிறது. இதன் மூலம் கோடிக்கணக்கான ரூபாய்கள் அரசுக்கு வருமானம் கிடைக்கிறது. பத்திரப்பதிவுக்கு வரும் பொதுமக்கள் ஒரு நாள் பொழுது ஆகிறது. இதனால் அவர்களின் சுகாதார நிலை என்னாவது அரசு கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்குமா?*

## மடிப்பாக்கம் பகுதியில் போலியான வாரிசு சான்றுடன்

# ஆள்மாறாட்டம் செய்து ரூ.2 கோடி மதிப்புள்ள இடத்தை விற்பனை செய்து அபகரித்த 3 நபர்கள் கைது.







புகார்தாரர் சுப்பிரமணி, ஆ/வ.55, த/பெ.பெரியசாமிபிள்ளை என்பவர் கடந்த 11.08.2025ம் தேதி மடிப்பாக்கம் கிராமம் கீழ்கட்டளை பகுதியில் உள்ள அவரது சொத்தை புகார்தாரர் இறந்து விட்டதாக கூறி புகார்தாரின் பெயரில் இறந்து போன மற்றொரு நபரின் இறப்பு சான்றிதழை பெற்று அதன் மூலம் பிரியா என்ற நபர் ஆள்மாறாட்டம் செய்து அவர் மட்டுமே புகார்தாரருக்கு வாரிசு என்று புகார்தாரரின் மடிப்பாக்கம், கீழ்கட்டளையில் உள்ள ரூ.2 கோடி மதிப்புள்ள 2,530 ச.அடி. சொத்தை விற்பனை செய்து சுயலாபம் அடைந்துள்ளார் எனவும், ஆள்மாறாட்டம் செய்த பிரியா க/பெ.தீனதயாளன் என்ற நபரையும் அவருக்கு உடந்தையாக இருந்தவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்குமாறு சென்னை பெருநகர காவல் ஆணையாளரிடம் கொடுக்கப்பட்ட புகார் மனுவினை வழிவழியாக பெறப்பட்டு கடந்த 09.09.2025ம் தேதி மத்திய குற்றப்பிரிவில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, புலன் விசாரணைக்கு எடுத்துகொள்ளப்பட்டது.

இவ்வழக்கு சம்மந்தமாக துரித நடவடிக்கை எடுத்து வழக்கின் எதிரிகளை கைது செய்து, பாதிக்கப்பட்ட நபருக்கு உரிய சட்டத்தின் மூலம் நீதி பெற்று தந்திட சென்னை பெருநகர காவல் ஆணையாளர் திரு.ஆ.அருண், இ.கா.ப., அவர்களின் உத்தரவின்பேரில், சென்னை மத்திய குற்றப்பிரிவு கூடுதல் காவல் ஆணையாளர் திருமதி.ஏ.ராதிகா, இ.கா.ப., அவர்களின் வழிகாட்டுதலின்பேரில், காவல் துணை ஆணையாளர் திருமதி.வி.வி.கீதாஞ்சலி அவர்களின் மேற்பார்வையில், போலி ஆவண புலனாய்வு பிரிவு (Forgery Investigation Wing) உதவி ஆணையாளர் செல்வி.காயத்ரி, காவல் ஆய்வாளர், உதவி ஆய்வாளர் மற்றும் காவலர்கள் கொண்ட தனிப்படை அமைத்து, உரிய விசாரணை மேற்கொண்டு, குற்ற நிகழ்வினை உறுதி செய்து, எதிரிகளை தேடி வந்த நிலையில், கே.கே.நகர் பகுதியை சேர்ந்த எதிரி பிரியா, வ/32, க/பெ.தீனதயாளன் என்பவரை 25.09.2025ம்தேதி கைது செய்தும், அவரது வாக்குமுலத்தின் தகவலின்படி, பிரியாவுக்கு தெரிந்த சில நபர்கள் மூலம் புகார்தாரரின் பெயரில் இறந்து போன மற்றொரு நபரின் இறப்பு சான்றிதழை பெற்று அதன் மூலம் எதிரி பிரியாவை புகார்தாரரின் மகள் போன்று ஆள்மாறாட்டம் செய்து எதிரி பிரியா மட்டுமே புகார்தாரருக்கு வாரிசு என்று போலியாக வருவாய் துறை வாரிசு சான்றிதழ் பெற்று புகார்தாரரின் இடத்தை அபகரித்துள்ளார்கள் என்பது தெரியவந்தது. இந்நிலையில், மேலும் இவ்வழக்கில் இடைத்தரகர்களாக இருந்து போலி ஆவணங்களை தயார் செய்து கொடுத்த எதிரிகளான ஜமின் பல்லாவரத்தைச் சேர்ந்த பாலசுந்தர ஆறுமுகம், ஆ/வ.40, மற்றும் வானுமாம்பேட்டையைச் சேர்ந்த சாலமன்ராஜ் ஆ/வ.38 ஆகியோரை தனிப்படையினர், சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் தேடி வந்த நிலையில், தகுந்த புலன் வைத்து, முறையே திருச்சி மற்றும் படப்பை பகுதியில் கடந்த 02.10.2025ம் தேதி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டனர்.

மேலும் இவ்வழக்கு சம்மந்தப்பட்ட மற்ற எதிரிகளை கைது செய்ய வேண்டி எதிரிகளை தேடி வருகின்றனர்.

மேலும் நிலம் வாங்கும் போது பொதுமக்கள் நிலத்தின் தாய் பத்திரங்களை சரிபாரத்து, உரிய சரிபார்த்தலுக்கு பின்பு வர்த்தக பரிவர்த்தனை செய்திடவும், சென்னை பெருநகர காவல்துறை மூலம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.



# கரூர் செல்ல தீவிரம் காட்டும் விஜய்

கரூர் மாவட்டத்தில் கடந்த மாதம் 27ம் தேதி தமிழக வெற்றி கழகத்தின் தலைவர் விஜய் தலைமையில் பிரசார கூட்டம் நடைபெற்றது. பிரசார கூட்டத்தின் போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி குழந்தைகள் உட்பட 41 தொண்டர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர். தமிழகம் மட்டுமல்லாது நாடு முழுவதும் இந்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. முதல்வர் தொடங்கி பிரதமர் வரை இச்சம்பவத்திற்கு தங்களது இரங்கலைத் தெரிவித்தனர்.

தமிழக அரசு சார்பில் உரிய பாதுகாப்பு வழங்கப்படாததே அசம்பாவிதத்திற்கு காரணம் என தமிழக வெற்றி கழகமும், விதிமுறைகளை ஒழுங்காக பின்பற்றாததே விபத்துக்கு காரணம் என தவெக மீது தமிழக அரசும் என பரஸ்பரம் மாறி மாறி குற்றச்சாட்டுகளை அடுக்கிக்கொண்டே செல்கின்றன. தமிழக அரசு மற்றும் தவெக சார்பில் நீதிமன்றத்தில் மாறி மாறி முறையிடப்பட்டுள்ளன.

சம்பவத்தன்று விஜய் கரூரில் இருந்து திருச்சிக்கு காரில் பயணிக்கும் போதே அசம்பாவிதம் தொடர்பான செய்தி அவருக்கு சென்றடைந்துவிட்டது. அவர் உடனடியாக மருத்துவமனைக்கு செல்ல உத்தரவிட்ட நிலையில், தற்போது சூழல் நமக்கு சாதகமாக இல்லை. மருத்துவமனையில் திமுக அமைச்சர்கள், அவர்களது ஆதரவாளர்கள் குவிந்துவிட்டனர். நாம் தற்போது அங்கு சென்றார் அவர்கள் உங்கள் மீது தாக்குதல் நடத்த வாய்ப்பு உள்ளது. எனவே தற்போதைக்கு சென்னைக்கு செல்வதே நல்லது என விஜய்யின் ஆலோசகர்கள் கேட்டுக் கொண்டதைத் தொடர்ந்து அவர் தனி விமானத்தில் சென்னை புறப்பட்டார்.

இதனிடையே சம்பவத்தன்றே முதல்வர், திமுக அமைச்சர்கள், அடுத்த தினமே எதிர்க்கட்சி தலைவர் என பல அரசியல் கட்சி தலைவர்களும் மருத்துவமனைக்கு வந்து பாதிக்கப்பட்டவர்களை நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்துள்ளனர். ஆனால் விபத்துக்கு மையப்புள்ளியாகக் கருதப்படும் விஜய் தற்போது வரை பாதிக்கப்பட்டவர்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறவில்லை என்ற குற்றச்சாட்டு இருந்துகொண்டே இருக்கிறது.

இந்நிலையில், தற்போது கரூர் செல்வதற்காக விஜய் தயாராகியுள்ளார். கரூர் செல்வதற்கான பணிகளை தீவிரப்படுத்துமாறு விஜய் தனது ஆதரவாளர்களுக்கு உத்தரவிட்டுள்ளார். அதன் அடிப்படையில் அவரது ஆதரவாளர்கள் காவல் துறையினரை அணுகி அனுமதி கேட்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

கரூர் சம்பவத்தைத் தொடர்ந்து விஜய் மற்றும் தவெக.வுக்கு ஆதரவாக சமூக வலைதளங்களில் கருத்து தெரிவிக்கும் நபர்கள் மீது காவல் துறையினர் நடவடிக்கை எடுத்து வருவதாக சொல்லப்படுகிறது. இந்நிலையில், பாதிக்கப்படும் நபர்களுக்கு சட்ட உதவி வழங்கும் வகையில் 20 பேர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்த குழுவில், 15 மாவட்டச்செயலாளர்கள், 5 வழக்கறிஞர்கள் இடம்பெறுவார்கள் என்று சொல்லப்படுகிறது.



## பட்டுக்கோட்டை அருகே

# சாலை, மின்சாரம், கழிவறை வசதியின்றி அவதிப்படும் கிராம மக்கள்

## அடிப்படை தேவைகளை நிறைவேற்ற கோரிக்கை

பட்டுக்கோட்டை அருகே கழுகுபுலிக்காட்டில் சாலை, மின்சாரம், கழிவறை உள்ளிட்ட வசதிகள் இல்லாததால் கிராம மக்கள் அவதிப்பட்டு வருகிறார்கள். அடிப்படை தேவைகளை நிறைவேற்றவேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை அருகே உள்ள கழுகுபுலிக்காடு கிராமத்தில் ஆதிதிராவிடர் காலனியில் 70–க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். இந்த பகுதியை சேர்ந்த பொதுமக்கள் பல ஆண்டுகளாக கழிவறை வசதி இல்லாததால் கடும் அவதிக்கு ஆளாகி வருகிறார்கள். இயற்கை உபாதைகளை கழிப்பதற்கு குடியிருப்பு பகுதியில் இருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள நரியாறு பகுதிக்கு செல்ல வேண்டி உள்ளதாகவும், பாதுகாப்பற்ற சூழல் நிலவுவதாகவும் கிராம மக்கள் கவலை தெரிவிக்கிறார்கள்.

இதனால் வயதுக்கு வந்த பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் என அனைத்து தரப்பினரும் மிகுந்த சிரமத்துக்கு உள்ளாகின்றனர். மேலும் இந்த பகுதியில் பல ஆண்டுகளுக்கு முன்புகட்டப்பட்ட தொகுப்பு வீடுகள் இடிந்து மிகமோசமான நிலையில் உள்ளன. சாலை வசதி, மின்சார வசதி உள்ளிட்ட எந்த ஒரு அடிப்படை வசதியும் இல்லாமல் வாழ்ந்து வருவதாக பொதுமக்கள் வேதனை தெரிவிக்கின்றனர். இது குறித்து பலமுறை அதிகாரிகளிடம் முறையிட்டும் இதுவரைக்கும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பது பொதுமக்களின் குற்றச்சாட்டாக உள்ளது. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுத்து இந்த பகுதிக்கு தேவையான அடிப்படை தேவைகளை நிறைவேற்ற வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.





# போலி லோன் விளம்பரங்கள் மூலம் மோசடி...

## எச்சரிக்கும் திருச்சி சைபர் க்ரைம் போலீசார்

போலி லோன் விளம்பரங்கள் மூலம் சைபர்மோசடியில் ஈடுபட்ட நபர்களை திருச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. செ.செல்வநாகரத்தினம், இ.கா.ப., அவர்களின் உத்தரவின்பேரில் சைபர்கிரைம் காவல் ஆய்வாளர் தலைமையில் அமைக்கப்பட்ட தனிப்படையினர் கைது செய்தனர்.

இந்த வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள மூன்று நபர்களும் பொதுமக்களோட செல் நம்பருக்கு எஸ்எம்எஸ் மூலமாக குறைந்த வட்டியில் 1%க்கு 1 லட்சம் முதல் 10 லட்சம் வரை லோன் பெற கீழ்க்கண்ட போன் நம்பனை அணுகவும் என சொல்லிட்டு பல்க் மெசேஜை அனுப்பிவிடுகிறார்கள். அதை படித்து பார்க்கும் பொதுமக்கள் அந்த நபர்களை காண்டாக்ட் பண்ணும் போது முதலில் டாக்குமெண்ட் வெரிஃபிகேஷன் என கூறி ஆதார் கார்டு, பான் கார்டு, பேங்க் பாஸ்புக் அனுப்ப சொல்லி வாட்ஸ்அப் அனுப்ப சொல்லி ஒரு நம்பர் கொடுக்கிறார்கள். அந்த வாட்ஸ்அப் நம்பருக்கு அனுப்புன பிறகு அடுத்த நாள் அந்த நபர்கள் போன் பண்ணி உங்களுக்கு லோன் வாங்குறதுக்கு எலிஜிபில் இவ்வளவு என்று சொல்லி பிராசசிங் பீஸ் வேணும் சொல்லி அவங்க அக்கவுண்ட் நம்பர் கொடுத்து அமௌண்ட் போட சொல்றாங்க.. அமௌண்ட் போட்டதுக்கு அப்புறம் ரெண்டு மாசத்துல பிராசசிங் லோன் பிராசசிங்க்ல இருக்குனு சொல்றாங்க.. ரெண்டு மாசம் கழிச்சு அவங்க போன் நம்பரை சுவிட்ச் ஆஃப் பண்ணிடுறாங்க இவங்க அவங்கள காண்டாக்ட் பண்ண முடியல லோன் வாங்கவும் முடியலை.. கொடுத்த பணத்தை ரிட்டர்ன் கேட்கவும் அவங்கள தொடர்பு கொள்ள முடியல. இதுபோல அவங்க எந்தெந்த நம்பர் யூஸ் பண்றாங்க அப்படினா பிரதமர் மோடியோட முத்ரா லோன், தனலட்சுமி தனிநபர் கடன், கேப்பிட்டல் பைனான்ஸ் அப்படிங்கற பெயர் யூஸ் பண்ணி அவங்க டிபி ப்ரோபைலையம் இந்த நேம்ல வச்சு அவங்க நம்புறது மாதிரி ஆசை வார்த்தை கூறி லோன் தர்றோம் சொல்லிட்டு ஏமாத்திராங்க.. இதுபோல குறைந் வட்டியில் லோன் தரேன்னு சொல்லியோ அல்லது பார்ட் டைம் ஜாப், ஷேர் மார்க்கெட் முதலீடு பண்ண டபுள் ஆக்கி தரோம் என்று சொல்லியோ இல்ல பேங்க்ல இருந்து பேசுறோம்.. அப்டேட்க்காக OTP கேட்டாலும் யாரும் தரவேண்டாம். இதுபோல மெசேஜ், எஸ்எம்எஸ் மூலமாக இதுல எதுல வந்தாலும் லிங்க் கிளிக் பண்ண வேணாம்.. அப்படி கிளிக் பண்ணி பணம் ஏதும் லாஸ் ஆயிடுச்சுனா உடனே 1930 என்ற நம்பருக்கு தொடர்பு பண்ணி சொல்லவும். அல்லது www.cybercrime.gov.in என்ற இணையதளத்தில் புகார் அளிக்கவும்.

மேலும், சமூக வலைதளங்களை பயன்படுத்தி இதுபோன்ற போலி விளம்பரங்கள் மூலம் மோசடியில் ஈடுபடும் நபர்கள் கூறும் ஆசை வார்த்தைகளை நம்பி பொதுமக்கள் யாரும் பணம் கொடுத்து ஏமாற வேண்டாம் என திருச்சி மாவட்ட காவல்துறை சார்பில் கேட்டுக் கொள்ளப்படுகிறது.




# யார் இந்த பிரதாப் ஐஏஎஸ்?

## மக்களை ஈர்த்த மாவட்ட ஆட்சியர்!

விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பு கிராமத்தை சேர்ந்தவர். தந்தை முருகவன். சிறு விவசாயியாக இருக்கிறார். தாயார் முல்லைக்கொடி. எளிய குடும்பத்தில் பிறந்து வளர்ந்த பிரதாப், முதல் பட்டதாரி என்ற பெருமையை பெற்றார். அதுமட்டுமின்றி அவரது குடும்பத்தில் முதல் அரசு ஊழியர் என்பது கவனிக்கத்தக்கது. சிறுவயது முதலே ஆட்சியராக வேண்டும் என்ற கனவு கண்டார். விடாமல் அதற்கான வேலைகளையும் செய்தார். கல்லூரி பருவத்திலேயே பயிற்சியை தொடங்கினார். அண்ணா பல்கலைக்கழகத்தில் பி.டெக் கெமிக்கல் எஞ்சினியரிங் படித்தவர்.

ஆட்சியராக வேண்டும் என்ற தீராத ஆர்வம் பயிற்சியில் அதிக ஈடுபாட்டை செலுத்தியது. இதன் விளைவாக முதல் முயற்சியிலேயே சிவில் சர்வீஸ் தேர்வில் தேர்ச்சி பெற்று அசத்தினார். 2017 தமிழ்நாடு பேட்சில் பணியில் சேர்ந்தார். அப்போது வெளிவந்த தேர்வு முடிவுகளில் தமிழகத்திலேயே முதலிடம் பிடித்தார். 2017—18ஆம் ஆண்டுகளில் உத்தரகாண்ட் மாநிலத்தில் பயிற்சி அதிகாரியாக பணியாற்றினார். 2018—19 காலகட்டத்தில் திருவண்ணாமலை மாவட்டத்தில் துணை ஆட்சியராக பயிற்சி பெற்றார். இதையடுத்து 3 மாத காலங்கள் மத்திய அரசின் கிராமப்புற மேம்பாட்டுத் துறை துணைச் செயலாளராக பணியாற்றினார்.

2019 தர்மபுரி மாவட்டம் அரூரில் துணை ஆட்சியராக பதவி கிடைத்தது. இங்கு தான் பிரதாப் ஐஏஎஸ் அவர்களின் ஆட்சியர் பதவிக்கான அச்சாரம் போடப்பட்டது. மக்களுடன் மக்களாக பழகினார். 1,500க்கும் மேற்பட்ட மக்களுக்கு பட்டா கிடைக்க நடவடிக்கை எடுத்தார். அரூரில் இருந்த மலை கிராம மக்களுக்கு மின் இணைப்பு வழங்கினார். இதனால் தர்மபுரி மாவட்ட மக்களிடையே பெரிய அளவில் கவனம் பெற்றார். பின்னர் திருவண்ணாமலை மாவட்டத்தில் ஊரக வளர்ச்சி துறையில் கூடுதல் ஆட்சியராக பணியாற்றினார்.

ஒரே மாதத்தில் 1,000 குளங்களை வெட்டுவதற்கான ஆணையை பெற்று, அதில் வெற்றியும் கண்டார். இது கின்னஸ் சாதனை புத்தகத்தில் பிரதாப் ஐஏஎஸ் பெயரை பொறிக்க வழிவகுத்தது. இதன்மூலம் முதலமைச்சர் விருது பெற்று தமிழக அளவில் கவனம் பெறும் அதிகாரியாக மாறினார். 2022ஆம் ஆண்டு ஜூன் மாதம் கோவை மாநகராட்சி ஆணையராக பொறுப்பேற்றார். மேலும் கோவை ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் மேலாளராகவும் பதவி வகித்தார்.

வார்டு வார்டாக நேரில் சென்று மக்கள் குறைகளை கேட்டறிந்து தீர்வு காண முயன்றது, மாநகராட்சி வளர்ச்சி பணிகளை முடுக்கி விட்டது, புதிய திட்டங்களை விரைவாக செயல்படுத்தியது என தனது செயல்பாடுகள் மூலம் கவனம் பெற்றார். எல்லாவற்றுக்கும் மேலாக கோவை மக்களின் குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு காண நடவடிக்கை எடுத்தது பாராட்டுகளை பெற வைத்தது.

2023ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி கழகம், சிறப்பு திட்ட செயலாக்கத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சிறப்பாக பணியாற்றினார். 2024—25 காலகட்டத்தில் தமிழ்நாடு பெண்கள் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்பு திட்டத்தின் இயக்குநராக பதவி வகித்தார். இந்நிலையில் தான் கடந்த ஜனவரியில் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியராக பிரதாப் ஐஏஎஸ் பொறுப்பேற்றார். இங்கேயும் மக்கள் பணிகளில் தீவிரமாக செயல்பட்டு வருகிறார்.




## திருச்சி மாவட்டத்தில் உள்ள அனைத்து சரித்திர பதிவேடு குற்றவாளிகளின் நடவடிக்கைகளை கண்காணிக்கும் பொருட்டு

# கருடன் என்ற மொபைல் செயலி அறிமுகம்...

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள அனைத்து காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொலை, கொள்ளை, திருட்டு, சட்ட விரோத செயல்கள், மற்றும் பொதுமக்களின் அமைதிக்கு அச்சுறுத்தும் வகையில் செயல்படும் சமூக விரோதிகள் மற்றும் ரவுடிகள் என 850—ற்கும் மேற்பட்ட சரித்திர பதிவேடு குற்றவாளிகளை காவல்துறையினர் நேரடியாக அவர்களின் இருப்பிடத்திற்கு சென்று குற்ற சம்பவங்கள் ஏதும் நடைபெறாமல் தடுக்கும் பொருட்டு தொடர்ச்சியாக கண்காணித்து வருகின்றனர்.

இந்நிலையில் மேற்படி திருச்சி மாவட்டத்தில் உள்ள அனைத்து சரித்திர பதிவேடு குற்றவாளிகளை கண்காணிக்கும் பொருட்டு திருச்சி மாவட்ட காவல்



கண்காணிப்பாளர் திரு.செ.செல்வநாகரத்தினம், இ.கா.ப., அவர்களின் ஆலோசனையின் பேரில் திருச்சிராப்பள்ளி அண்ணா பல்கலைக்கழக கணிணி அறிவியல் துறையுடன் சேர்ந்து சரித்திர பதிவேடு குற்றவாளிகளை கண்காணிக்கும் "கருடன்" எனும் புதிய மொபைல் செயலி உருவாக்கப்பட்டு, சுப்பிரமணியபுரம், காவல் திருமண மண்டபத்தில் (03.10.2025) நடைபெற்ற நிகழ்ச்சியில் அறிமுகம் செய்யப்பட்டது.

மேற்படி நிகழ்ச்சியில் திருச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. செ.செல்வநாகரத்தினம், இ.கா.ப., அவர்கள் சரித்திர பதிவேடு குற்றவாளிகளை கண்காணிக்கும் “கருடன்” மொபைல் செயலி உருவாக்கத்தில் பெரும் பங்காற்றிய அண்ணா பல்கலைக்கழக கணிணி அறிவியல் துறையைச் சேர்ந்த பேராசிரியர் டாக்டர் திரு. செந்தில்குமார் மற்றும் இறுதியாண்டு மாணவர்களான திரு.அகில் அகமத், திரு.ஆசிப் நவ்ஹித், திரு.மோகன் ஆகியோரை வெகுவாக பாராட்டியதுடன், நிகழ்ச்சியில் கலந்துகொண்ட காவல் அதிகாரிகள் மற்றும் காவல் ஆளிநர்களுக்கு இச்செயலியின் முக்கியத்துவம் குறித்தும், செயலியை பயன்படுத்துதல் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.




புதுக்கோட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. அபிஷேக் குப்தா இ.கா.ப., அவர்கள் புதுக்கோட்டை மாவட்ட அனைத்து காவல் அதிகாரிகளுடன் சட்டம் ஒழுங்கு பணி தொடர்பான மாதாந்திர குற்ற ஆய்வுக் கூட்டம் (Monthly Crime Review Meeting) நடத்தி பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். மேலும் குற்ற வழக்குகளில் சிறப்பாக பணிபுரிந்த காவல் அதிகாரிகள் மற்றும் ஆளினர்கள் மொத்தம் 9 நபர்களை (04.10.2025) நேரடியாக வரவழைத்து பாராட்டி நற்சான்றிதழ் வழங்கினார்கள்.

---

# வழிநடத்தும் வாழ்க்கை

நகர்ந்து செல்கிறது இரவும் பகலும்
நாடகம் நடத்தும் வெளிச்சமும் இருட்டும்

பிறக்கும் உயிர்கள் வாழ்வும் சாவும்
பிழையின்றி வாழ்வதே உயிரும் உறவும்

ஏக்கத்தில் வளரும் அன்பும் ஆசையும்
எதையும் சாதிக்கும் எழுதுகோலும் எழுத்தும்

இளமையில் இனிக்கும் காமமும் மோகமும்
இதயத்தை வழிநடத்தும் எண்ணமும் செயலும்

மனதுக்குள் போராடும் உழைப்பும் சோம்பேறியும்
மங்காத துடிப்பு தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும்

கெட்டதை அகற்றும் உண்மையும் நேர்மையும்
கெடாமல் வாழ்வது திறமையும் தைரியமும்

இல்லறம் கைகொடுக்கும் இன்பமும் துன்பமும்
இல்லத்தை அலங்கரிக்கும் மனைவியும் மந்திரமும்


வாழ்வதை நிர்ணயிக்கும் பணியும் பிணியும்
வாழ்ந்ததை சொல்லும் வறுமையும் திறமையும்

முதிர்வை கொண்டாடும் வெற்றியும் தோல்வியும்
முண்டினாலும் விடாது முடிவும் இறப்பும்

இருக்கும்வரை காப்போம் உடலையும் உள்ளத்தையும்
இறக்கும்வரை கொடுப்போம் அன்பையும் பாசத்தையும்



- சி.சுபாஷ் சந்திர போஸ்,
காவல்துணைக்கண்காணிப்பாளர் (ஓய்வு)







மேற்கு மண்டல காவல்துறை தலைவர் திரு.டி.செந்தில்குமார். இ.கா.ப., அவர்கள் "Hill Cop Creche" – காவலர் குழந்தைகள் காப்பகத்தை துவக்கி வைத்தார். உடன் நீலகிரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி. என் எஸ் நிஷா. இ.கா.ப., இருந்தார்.



## மதுரையில் காவலர்களுக்கு தீயணைப்பு பயிற்சி வகுப்பு

தீபாவளி பண்டிகை காலம் நெருங்குவதை முன்னிட்டும், எதிர்பாரதவிதமாக தற்சமயம் மதுரை மீனாட்சி பஜார் பகுதியில் ஏற்பட்ட தீ விபத்தினை கருத்தில் கொண்டும் மதுரை மாநகர காவல் ஆணையர் அவர்களின் உத்தரவின் பெயரில், வாராந்திர கவாத்து பயிற்சியின் போது, மாநகரில் களப்பணியாற்றும் காவலர்களுக்கு தீ விபத்து ஏற்படும் காலங்களில் தீயை கட்டுக்குள் கொண்டு வந்து பெரும் சேத விபத்தினை தடுப்பது தொடர்பான தீயணைப்பு பயிற்சி வகுப்பானது காவல்துணை ஆணையர் (ஆயுதப்படை) அவர்கள் முன்னிலையில் வழங்கப்பட்டது.



திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.மனிஷ் நாரணவரே இ.ஆ.ப., அவர்கள் இன்று (04.10.2025) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், தளிஞ்சி மற்றும் தளிஞ்சி வயல் பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டு பொதுமக்களின் பல்வேறு கோரிக்கைகள் குறித்து கேட்டறிந்தார்கள். உடன் மாவட்ட வன அலுவலர் திரு.ராஜேஷ் இ.வ.ப. அவர்கள் உள்ளார்.



## கனிமவள லாரி உரிமையாளர்கள் மற்றும் கிரஷர் உரிமையாளர்களுடன்

# தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தலைமையில் ஆலோசனை கூட்டம்

தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் தலைமையில் கனிமவள லாரி உரிமையாளர்கள் மற்றும் கிரஷர் உரிமையாளர்களுடன் வாகன விபத்துகளை தவிர்த்தல் மற்றும் கால / வேக வரையறைகளை வாகனங்கள் தவறாது பின்பற்றுதல் தொடர்பான ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

மேற்படி ஆலோசனை கூட்டத்தில் 1) திரு. செ. அரவிந்த், காவல் கண்காணிப்பாளர், தென்காசி. 2) திரு. N.சரவணபவன், வட்டார போக்குவரத்து அலுவலர், தென்காசி. 3) திரு. T.வினோத், உதவி இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்க துறை, தென்காசி. 4) திரு. செ.தமிழ் இனியன், காவல்துணை கண்காணிப்பாளர், தென்காசி உட்கோட்டம் 5) திரு.S. கிளாட்சன் ஜோஸ், காவல்துணை கண்காணிப்பாளர், ஆலங்குளம் உட்கோட்டம் 6) திரு. ஆ.வெங்கடசேகர், வட்டாட்சியர், செங்கோட்டை வட்டம் ஆகியோரும் மற்றும் 1) அனைத்து கிரஷர் உரிமையாளர்கள் 2) இந்தியன் டிரைவர் சொசைட்டி செயலாளர் 3) செங்கோட்டை லாரி உரிமையாளர்கள் சங்கத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

மேற்படி கூட்டத்தில் கால வரையறை மற்றும் வேக வரையறை பற்றி எடுத்துரைக்கப்பட்டது. காலை 6 மணி முதல் 11 மணி வரையும் மாலை 3 மணி முதல் இரவு 8 மணி வரையிலும் தென்காசி மாவட்டத்தின் எந்த பகுதியிலும் கனிமவள லாரிகள் நுழைய கூடாது கனிமங்கள் ஏற்றிச் செல்லும் லாரிகள் மேல் பகுதியில் மூடி செல்லவேண்டும் உட்பட பல கட்டுப்பாடுகளை விதிக்கப்பட்டது. அதை மீறும்பட்சத்தில் வாகன ஓட்டுநர் மற்றும் கிரஷர் உரிமையாளர்கள்/நடத்துனரும் பொறுப்பாவர் என்பது எடுத்துரைக்கப்பட்டது.

# கறம்பக்குடியில் மணல் கடத்திய வாகனத்தை நள்ளிரவு துரத்தி பிடித்த கோட்டாட்சியர்



கறம்பக்குடி அருகே திருமணஞ்சேரி அக்னி ஆற்றில் மணல் கடத்திச் சென்ற வாகனத்தை நள்ளிரவு நேரத்தில் மடக்கி பிடித்த வருவாய் கோட்டாட்சியர் ஐஸ்வர்யா வாகனத்தை காவல்நிலையத்தில் ஒப்படைத்தார்.

புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி ஆத்தங்கரைவிடுதி, திருமணஞ்சேரி, மழையூர் மற்றும் சுற்றுவட்டாரபகுதிகளில் ஆற்று மணல் கடத்தப்பட்டு வருகிறது. அவ்வப்போது சில மணல் கடத்தல் வாகனங்களை காவல்துறையினர் பறிமுதல் செய்தாலும் மணல் கடத்தல் தொடந்து இந்தப்பகுதியில் நடைபெற்று வருகிறது. இதுகுறித்து புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் ஐஸ்வர்யாவுக்கும் புகார் தெரிவிக்கப்பட்டது.

இதன் அடிப்படையில் கடந்த திங்கள்கிழமை நள்ளிரவு நேரத்தில் புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் ஐஸ்வர்யா திருமணஞ்சேரிஆர்ச் அருகே வாகன சோதனையில் ஈடுபட்டார். அப்பொழுது 1 யூனிட் ஆற்று மணல் ஏற்றிச்சென்ற பொலிரோபிக்அப் வாகனத்தை தடுத்து நிறுத்தியுள்ளார்.

ஆனால் அந்த வாகனம் நிறுத்தப்படாமல் அதிவேகமாக திருமணஞ்சேரி ஆர்ச்சிலிருந்து சென்றுள்ளது. அந்தவாகனத்தை தனது வாகனம் மூலம் பின்தொடர்ந்து துரத்தி சென்ற கோட்டாட்சியர் ஐஸ்வர்யா மணல் கடத்தி சென்ற வாகனத்தை சுக்கிரன்விடுதி கிராமத்தில் பிடித்தார். வாகனத்தை பிடித்த நிலையில் மணல் கடத்தி வந்த வாகன ஓட்டுநர் வாகனத்தை விட்டுவிட்டுதப்பி சென்றுள்ளார். வாகனத்தை கைப்பற்றிய வருவாய் கோட்டாட்சியர் ஐஸ்வர்யா கறம்பக்குடி காவல் நிலையத்தில் ஒப்படைத்துள்ளார். மேலும் அன்று இரவு 6 யூனிட் ஆற்று மணல் ஏற்றிச்சென்ற டிப்பர் லாரியை தப்ப விட்டுள்ளார் என சமூக ஆர்வலர்கள் கூறுகின்றனர். மணல் கடத்திச் சென்ற வாகனத்தை துரத்தி பிடித்த வீடியோ தற்பொழுது சமூக வலைதளங்களில் பரவி பரபரப்பை ஏற்படுத்துள்ளது. மேலும் இது சம்பந்தமாக கறம்பக்குடி காவல்துறையினர் வழக்குபதிவு செய்துவிசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# Z System Intelligent Controls Private Limited

system

Intelligence in Automation

We are prominent Industrial automation solution provider having strong knowledge and expertise in handling automation products like PLC, HMI/SCADA, VFD, PID controllers, Field transmitter, Switches, Sensors etc.

We areconversant in handling IOT, VR & AR applications

We offer complete sales, Engineering & Application development and Commissioning support services across India.

## Our Principles & Products

SIEMENS



PLC,HMI,Scada,VFD,IOT Solutions, RFID

azbil



Temperature Controller, Recorders, Switch, Sensors

TURCK



Sensors, Connectivity. Interface technology Analysers

AR, VR, ER Developement




## Our Service



Power



Water & Waste water



Metro



SPM



Cement



Metal



Smart World

## Our Clients

AIS MELSS KV Rane Subros TATA SHS sietec ALSTRUT INSIGHT interface MAHA MXHUB NIOT Nein Automation BGR ENERGY

## Contact Address

Plot No.36
27th Street
Thillai Ganga Nagar
Nanganallur
Chennai-600061
Website : www.zsystem.in

Plot No.22,23, Amal Nagar, Tambaram
Chennai-600045.Tamilnadu, India.
Phone : 098404 53136

/zsystem.in

/zsystem_in

/z-system-intelligent-controls-pvt-ltd


TAMILNADU POLICE
CCTNS - Citizen Portal
Online Acknowledgement

| | | |
|---|---|---|
| | | Date of Complaint :24-09-2025 |
| Reference Number | : WUS25492763 | |
| Date of Occurrence | : 22-09-2025 | |
| Subject | : Jewel Snatching / Theft | |
| Complainant Name | :SLOCHANA M | |
| Complainant Address | :181,INDIRA NAGAR,NADUVIKKOTTAI,PATTUKKOTTAI TK,THANJAVUR DT | |
| Phone Number(s) | : | |
| Email Id | :- | Report taken on: 24-09-2025 01:02 P |

To know the status visit : http://eservices.tnpolice.gov.in

BACK



# பேருந்தில் திருடு போன நகை...

## புகாரை எடுக்க மறுத்த

## பட்டுக்கோட்டை நகர காவல் நிலையம்

தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை, நடுவிக்கோட்டை இந்திராநகரைச் சேர்ந்தவர் எம்.சுலோஜனா வயது 65. இவர் சகோதரி வீட்டுக்குச் சென்று திரும்பிய போது பட்டுக்கோட்டை அறந்தாங்கி முக்கத்திலிருந்து புனல்வாசல் வழியாக செல்லும் 6A பேருந்தில் ஏறி தனது வீட்டிற்கு பயணம் செய்கிறார். அப்போது பேருந்தில் 45 வயது மதிக்கத்தக்க பெண்மணி ஒருவர் இவரை பேருந்தின் உள்ளே செல் என்று முதுகில் கைவைத்து தள்ளுகிறார். அவர் பேருந்தின் உள்ளே சென்ற பிறகு கழுத்திலிருந்த 5 பவுன் கொண்ட தாலி செயின் காணாமல் போனதையறிந்து பதட்டத்தில் பேருந்தில் இருந்து இறங்கி உள்ளார்.


தஞ்சை எஸ்.பி


பட்டுக்கோட்டை டிஎஸ்பி

இதுகுறித்து பட்டுக்கோட்டை நகர காவல்நிலையத்தில் புகார் அளித்தால் புகாரை ஏற்றுக்கொள்ளாமல் அலைக்கழித்துள்ளனர். இதனால் வழக்கறிஞர் மூலம் ஆன்லைனில் புகார் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் இதுகுறித்து இதுவரை எந்த விசாரணையும் காவல்துறையினரால் மேற்கொள்ளப்பட வில்லை. இந்தப் புகாரின் மீது நடவடிக்கை எடுக்காமல் இருக்கும் பட்டுக்கோட்டை நகர காவல்துறையின் மீது மாவட்ட காவல் கண்காணிப்பாளர், பட்டுக்கோட்டை துணை காவல்கண்காணிப்பாளர் ஆகியோர் நடவடிக்கை எடுப்பார்களா? பொறுத்திருந்து பார்ப்போம்.

Owned, Published And Printed By **R.SIVAKUMAR** Printed At **CHENNAI OFFSET PRINTERS**, 19/1, 21/2, Kitabathkhan Bhandur Street, Ellis Road, Chennai - 600002. Published From No.14/88, 3rd Main Road, Venkateswara Nagar, Velachery, Chennai - 600042 Editor: **R.SIVAKUMAR**




Follow us

Call Us
9962012354

Mail Us
Info@geesysindia.com

Learn more
www.geesysindia.com

# 25–ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

நினைவு நாள் : 08.10.2025 புதன்கிழமை



தெய்வத்திரு.

## N.ராஜரெத்தினம் நாட்டாமை

அவர்கள்

அப்பா என சொல்லும் முன் அழுகைதான்...
முன் வந்து நிற்கிறது காரணம் அருகில் நீ இல்லாததால்...

இருந்தாலும் இறந்தாலும் பேர் சொல்ல வேண்டும் .... இவர் போல யாரும் என்று ஊர் சொல்ல வேண்டும்...

...நினைவால் வாடும்...

மனைவி

**R.சாரதம்பாள்**

மகள் :

**தவச்செல்வி மதிமாறன்**

மகன்கள் :

**R.சிவகுமார்-ரேவதி**
**R.திருக்குமார்-விக்டோரியா மகாராணி**
**R.தினேஷ்குமார் - ரேஷ்மா**

பேரக்குழந்தைகள் :

**S.அஜய் இராஜரெத்தினம்**
**S.ராஜ ஸ்ரீ**
**D.லத்தீஷா**
**T.கிருத்திக்ராஜா**
**T.கௌசிக்ராஜா**

நவக்கொல்லைக்காடு